# சுபீட்சம்

SUPEEDSAM — EVERYTHING FOR PEOPLE

நிகழ்நிலை பத்திரிகை; அனைத்து விடயங்களும் மக்களுக்காகவே

செவ்வாய்க்கிழமை 05.07.2022 supeedsam.com supeedsam@gmail.com







## இலங்கையில் இன்று அல்லது நாளை கரும்புலிகள் தினத்தில்

# வேடிகுண்டுத் தாக்குதல்

## அனுர வெளியிட்ட அதிர்ச்சி தகவல்

(காந்தன்)

கரும்புலிகள் தினத்தில் வெடிகுண்டுத்தாக்குதல் நடத்தப்படலாம் எனும் செய்தியின் உண்மையை அரசாங்கம் உடனடியாக நாட்டு மக்களுக்கு அறிவிக்க வேண்டும் என்று ஜே.வி.பியின் தலைவரான நாடாளுமன்ற உறுப்பினர் அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

மேலும், அரசாங்கமே இவ்வாறான செய்பாடுகளில் ஈடுபட வாய்ப்புள்ளதாக தங்களுக்கு சந்தேகம் எழுந்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

கொழும்பில் நேற்று திங்கட்கிழமை நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இதன்போது மேலும் தெரிவித்த அவர், அரசாங்கமானது பிரச்சினைகளில் இருந்து தப்பித்துக் கொள்ள

02 ஆம் பக்கத்தில்...



## மே 9 ஆம் திகதி நடந்த சம்பவம் அரசின் சதியா?

### அனுர கேள்வி

(காந்தன்)

நாட்டில் மீண்டும் வன்முறையை ஏற்படுத்துவதற்கு மக்கள் விடுதலை முன்னணி உட்பட பல அரசியல் குழுக்கள் செயற்படுவதாக அரசாங்கம் முன்வைக்கும் குற்றச்சாட்டை நிராகரிப்பதாக அக்கட்சி தெரிவித்துள்ளது.

அத்தோடு, மே 9ஆம் திகதி நடந்த சம்பவம் அரசின் சதியா என சந்தேகம் எழுந்துள்ளதாக கட்சியின் தலைவர் அனுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

02 ஆம் பக்கத்தில்...

## வைத்தியசாலைகளின் பணிகள் முற்றாக தடைபடும் அபாயம்

(ஊர்காவலன்)

நாட்டில் ஏற்பட்டுள்ள எரிபொருள் நெருக்கடி காரணமாக கிராமிய வைத்தியசாலைகளின் பணிகள் முற்றாக தடைபடும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

உள்நோயாளிகளை அவர்களது வீடுகளுக்கு அனுப்பி வைக்க அந்த மருத்துவமனைகளின் அதிகாரிகள் ஏற்பாடு செய்துள்ளதுடன், வெளிநோயாளர் சிகிச்சை நிலையங்களும் தற்காலிகமாக மூடப்பட்டுள்ளன.

வைத்தியசாலை ஊழியர்கள் பணிக்கு சமூகமளிக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளமை காரணமாகவே வைத்தியசாலையின் செயற்பாடுகள் முடங்கியுள்ளன.

எனினும் ஆபத்தான நிலையில் உள்ள நோயாளிகளை

02 ஆம் பக்கத்தில்...

## அரசுக்கு எதிரான போராட்டங்களை தொடருங்கள்

(காந்தன்)

நாட்டின் பொருளாதார பிரச்சினைகளுக்கு தீர்வுகளை வழங்குவதை விடுத்து தவறான தகவல்களை அரசாங்கம் பரப்பிவருவதாக ஜே.வி.பி குற்றம் சுமத்தியுள்ளது.

நேற்று திங்கட்கிழமை ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த போதே ஜே.வி.பி.யின் தலைவர்

02 ஆம் பக்கத்தில்...

## எரிபோருள் நிரப்பு நிலையத்தில் இளைஞனை எட்டி உதைத்த இராணுவ அதிகாரி

### இராணுவத்தினரால் உள்ளக விசாரணைகள் ஆரம்பம்



எரிபொருள் நிரப்பு நிலையத்தில் இராணுவ அதிகாரி ஒருவர் இளைஞனை எட்டி உதைக்கும் சம்பவம் வெளியானதையடுத்து பெரும் சர்ச்சை ஏற்பட்டுள்ளது.

இந்த சம்பவம் நாட்டில் மட்டுமல்லாது, உலக நாடுகளிலும் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தும் எனவும் சமூக ஆர்வலர்கள் அச்சம் வெளியிட்டுள்ளனர்.

02 ஆம் பக்கத்தில்...

## ஜனாதிபதியையும் பிரதமரையும் காணவில்லை



மக்கள் பெரும் அவதிக்குள்ளாகி நெருக்கடியை எதிர்நோக்கும் நிலையில் ஜனாதிபதியையும் பிரதமரையும் காணவில்லை என முன்னாள் அமைச்சர் விமல் வீரவன்ச தெரிவித்துள்ளார்.

நேற்று நாடாளுமன்றத்தில் உரையாற்றிய அவர், எரிபொருள் மற்றும்

02 ஆம் பக்கத்தில்...

## கறுப்பு சந்தையில் பெட்ரோல்

கறுப்பு சந்தையில் ஒரு லிட்டர் பெட்ரோல் 2,000 ரூபாய்க்கு விற்கப்படுவதாக தகவல் வெளியாகியுள்ளது.

பலர் பரல்களில் பெட்ரோலை பதுக்கி வைத்து சட்டவிரோதமாக விற்பனை செய்து

02 ஆம் பக்கத்தில்...

## சஜித்- மைத்திரி அவசர சந்திப்பு

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசவிற்கும், முன்னாள் ஜனாதிபதி மைத்ரிபால சிறிசேனவிற்கும் இடையில் சந்திப்பொன்று இடம்பெற்றுள்ளது.

02 ஆம் பக்கத்தில்...


MATHE BILDUNGSZENTRUM
கணித கற்கைநெறி மையம்
MBZ
S.MAHENDIRAN
076 431 83 79
mbz.mahe@gmail.com
- MATHE BILDUNGSZENTRUM
MATHE மட்டுமல்ல
Deutsch, Französisch, Englisch, Gymi Prüfung
BMS, HMS, FMS, Gymi Probe
அத்தனைக்கும் கீழ்காணும் இடங்களில்
Oerlikon, Uster, Schaffhausen



"சுவிஸ் மக்களின் நம்பிக்கையான காப்புறுதிகளுக்கும், ஓய்வுகாலத் திட்டமிடலுக்கும் நிபுணத்துவ வழிகாட்டி கல்லாறு சதீஷ்"

aaDaa Finance 0798000100
Aadaa Finance GmbH
Dr.(h.c) Nageswaran Arulrasa D.Litt
CEO
Eidgenössische Finanzmarktaufsicht Nr.35302



Fachmann für versicherung & vorsorge
Hauptstrasse 54
6015 Luzern
Switzerland
079 8000 100
arulnages@yahoo.com
finma 34598
25605: cicero


## மக்கள் மீது மோத வந்த பஸ்: முல்லைத்தீவில் பதற்றம்



வவுனியாவில் இருந்து முல்லைத்தீவிற்கு வந்த வவுனியா சாலைக்கு சொந்தமான இ.போ.ச பேருந்து ஒன்றை, நேர அட்டவணைக்கு மாறாக சாரதி எடுத்துச் செல்லமுற்பட்ட போது குழப்பமான நிலை ஏற்பட்டுள்ளது.

குறித்த பேருந்தில் மக்கள் ஏறுவதற்கு முன்னதாகவே அதை கவனிக்காது பேருந்தை சாரதி

02 ஆம் பக்கத்தில்...

# கடன் மற்றும் குத்தகை (லீசிங்) மீளச் செலுத்துகையைப் பிற்போட இம்ரான் எம்.பி. பிரதமரிடம் கோரிக்கை

(எப்.முபாரக் )

நாட்டின் தற்போதைய பொருளாதார நெருக்கடியால் கடன் பெற்றவர்களும் குத்தகைக்கு வாகனம் பெற்றவர்களும் அதனை மீளச் செலுத்துவதில் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர் எனவே, கடன் மற்றும் குத்தகை (லீசிங்) மீளச் செலுத்துகையை குறித்த காலத்திற்குப் பிற்போட நடவடிக்கை எடுக்குமாறு திருகோணமலை மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் இம்ரான் மகரூப் பிரதமரும், நிதியமைச்சருமான ரணில் விக்ரமசிங்கவிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

பிரதமருக்கு அவர் எழுதியுள்ள கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

நாட்டில் பல்வேறு அரச அலுவலகங்களில் பணிபுரியும் அரச உத்தியோகத்தர்களும் தனிப்பட்ட வியாபார நடவடிக்கைகளில் ஈடுபடுவோரும் தமது தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக வங்கிகளில் கடன் பெற்று அதனை மீளச் செலுத்தி வருகின்றனர்.

இதேபோல வாகனங்களை குத்தகை அடிப்படையில் கொள்வனவு செய்தோர்களும் தவணை அடிப்படையில் அதனை மீளச் செலுத்தி வருகின்றனர்.



நாட்டின் தற்போதைய பொருளாதார நெருக்கடி காரணமாக அனைத்து பொருட்களினதும் விலை அதிகரித்து மக்களின் வாழ்க்கைச் செலவு மிக அதிகளவில் உயர்ந்துள்ளது. இதனால் பொதுமக்கள் தமது நாளாந்த வாழ்வாதாரச் செயற்பாடுகளை முன்னெடுப்பதற்குக் கூட மிகவும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர். அதேபோல வாகனங்களைப் பயன்படுத்தி தொழில் செய்வோர் எரிபொருள் பெற்றுக் கொள்வதற்காக நாட்கணக்கில் எரிபொருள் நிரப்பு நிலையங்களில் தங்கி இருக்கின்றனர். இதனால் இவர்கள் வாகனங்களைத் தொழிலுக்குப் பயன்படுத்தி வருமானம் பெற முடியாத நிலையில் உள்ளனர். இந்த நிலைமைகளை தாங்களும் அறிவீர்கள் என நான் உறுதியாக நம்புகின்றேன்.

நாட்டு மக்கள் தமது அன்றாட உணவுத் தேவையைக் கூட பூர்த்தி செய்யப் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வரும் இந்நிலையில் கடன் மற்றும் குத்தகைகளை மீளச் செலுத்துவதில் இதனோடு தொடர்பு பட்டவர்கள் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

எனவே, இதனைக் கருத்தில் கொண்டு கடன் மற்றும் லீசிங் மீளச் செலுத்துகைகளை குறித்த காலத்திற்குப் பிற்போட ஏற்பாடு செய்யுமாறு தயவுடன் கேட்டுக் கொள்கிறேன்.

இது விடயத்தில் தங்கள் அதிகபட்சம் கவனம் செலுத்துவதைப் பெரிதும் வரவேற்கிறேன். இவ்வாறு அக்கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## கறுப்பு சந்தையில் பெட்ரோல்

வருவதாக தெரியவந்துள்ளது.

இவ்வாறு பெட்ரோலை பதுக்கி வைத்திருப்பவர்களைக் கைது செய்ய பொலிஸாரும் இராணுவத்தினரும் இணைந்து விசேட சுற்றிவளைப்புகளை மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## சஜித்- மைத்திரி அவசர சந்திப்பு

கொழும்பிலுள்ள எதிர்கட்சி தலைவர் அலுவலகத்தில் நேற்று திங்கட்கிழமைபிற்பகல் இந்த சந்திப்பு இடம்பெற்றுள்ளது.

நாட்டின் தற்போதைய நெருக்கடி நிலைமைக்கு மத்தியில் 'தேசிய சீர்த்திருத்தங்கள் மற்றும் எதிர்கால திட்டங்கள்' தொடர்பில் இதன்போது விரிவாக கலந்துரையாடப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

குறிப்பாக சர்வகட்சி அரசாங்கத்தினை அமைப்பது குறித்தும் இதன்போது அவதானம் செலுத்தப்பட்டிருந்ததாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

இந்த கூட்டத்தில் பல்வேறு அரசியல் கட்சிகளின் தலைவர்கள் மற்றும் சிவில் ஆர்வலர்களும் கலந்து கொண்டிருந்ததாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

சர்வகட்சி அரசாங்கம் அமைக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கை மீண்டும் பல்வேறு தரப்பினராலும் முன்வைக்கப்பட்டு வரும் நிலையில், குறித்த சந்திப்பு இடம்பெற்றுள்ளது என்பதுக் குறிப்பிடத்தக்கது.

## மக்கள் மீது மோத வந்த பஸ்; முல்லைத்தீவில் பதற்றம்

செலுத்திய நிலையில், வீதியில் கூடிய ஏனைய சாரதிகள் மற்றும் நடத்துனர்கள் பேருந்தினை மறித்தபோதும் அதனை பொருட்படுத்தாது பேருந்தினை எடுத்துச் சென்றுள்ளார்.

இதன்போது மக்கள் சிலர் மீது பேருந்து மோத முற்பட்டபோதும் பேருந்தில் ஏறிய பயணிகளை உரியவகையில் ஏற்றாதும் அபாயகரமான முறையில் சாரதி பேருந்தினை எடுத்து சென்றார் . இதனை தொடர்ந்து பேருந்தினை துரத்தி சென்ற சிலர் அதை மறித்துள்ளதுடன் சாரதி மீது தாக்குதல் நடத்தியுள்ளார்கள்.

இதன்போது காயமடைந்த சாரதி முல்லைத்தீவு மாவட்ட மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளதுடன் பேருந்தினை முல்லைத்தீவு பொலிஸ் நிலையம் கொண்டு சென்றுள்ளார்கள். இந்த சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை முல்லைத்தீவு பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர் .

## இலங்கையில் இன்று அல்லது நாளை கரும்புலிகள் தினத்தில்

நாட்டை மீண்டும் குழப்ப முயற்சித்து வருகிறது.

2022 ஜுன் 27 ஆம் திகதி, பாதுகாப்புச் செயலாளரான கமால் குணரட்னவுக்கு பொலிஸ்மா அதிபர் சி.டி. விக்ரமரத்ன விசேட கடிதமொன்றை அனுப்பியுள்ளார். 29 ஆம் திகதி பாதுகாப்புச் செயலகத்திற்கு இந்தக்கடிதம் கிடைத்துள்ளது.

இந்தக் கடிதத்தில் ஜுலை மாதம் 5 மற்றும் 6 ஆம் திகதிகளில் ஆரம்பமாகவுள்ள கரும்புலிகள் தினத்தை இலக்கு வைத்து, வெளிநாட்டு புலனாய்வு அமைப்பொன்று வடக்கில் அல்லது தெற்கில் வெடிகுண்டுத் தாக்குதல் நடத்தலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனால் யாழில் உள்ள வெளிநாட்டு நிறுவனங்களில் வேலை செய்வோர் மற்றும் வி.ஐ.பிக்களுக்கு எந்தவொரு நிகழ்விலும் 5 மற்றும் 6 ஆம் திகதிகளில் கலந்துகொள்ள வேண்டாம் என அறிவிக்கப்பட்டுள்ளதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

வெளிநாட்டுப் புலனாய்வு அமைப்பொன்றின் ஊடாக வெடி குண்டு தாக்குதல் நடத்தப்படலாம் எனும் செய்தியை பொலிஸ் மா அதிபர் ஊடாக, பாதுகாப்புச் செயலாளருக்க அரசாங்கம் தெரியப்படுத்தியுள்ளது.

இதுதொடர்பாக அரசாங்கம் உடனடியாக நாட்டு மக்களுக்கு தெரியப்படுத்த வேண்டும். இந்தத் தகவலானது யார் ஊடாக கிடைத்தது? இந்த செய்தி உண்மையா? என்பதை வெளிப்படுத்த வேண்டும்.

இதனை அரசாங்கம் செய்யத் தவறினால், அரசாங்கத்திற்கு எதிரான மக்களின் போராட்டத்தை திசைத்திருப்பவே அரசாங்கம் இவ்வாறான நடவடிக்கைகளை மேற்கொள்வதாக சந்தேகிக்கப்படும்.

எனவே, இந்த வெடிகுண்டு அச்சுறுத்தலும் அரசாங்கத்தின் திட்டமிட்ட செயலாக இருக்குமோ எனும் சந்தேகம் ஏற்பட்டுள்ளது.

ஆட்சியிலிருந்து வெளியேற வேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளமையால், மீளவும் அதிகாரத்தைக் கைப்பற்ற எதையும் செய்யக்கூடிய நிலையில்தான் இந்த அரசாங்கம் உள்ளது. மக்களும் இதுதொடர்பாக அவதானத்துடன் செயற்பட வேண்டும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.




## வைத்தியசாலைகளின் பணிகள் முற்றாக

பிரதான வைத்தியசாலைகளுக்கு மாற்றுவதன் மூலம் அவர்களுக்கு தேவையான சிகிச்சை வழங்கப்படுவதாக வைத்தியர்கள் தெரிவித்துள்ளனர்.

மாத்தறை, வெலிகம பிராந்திய வைத்தியசாலையின் வைத்தியர்கள் மற்றும் ஊழியர்கள் எதிர்நோக்கியுள்ள எரிபொருள் பற்றாக்குறை காரணமாக வைத்தியசாலையை கடந்த 2 ஆம் திகதி முதல் மூட வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதன் காரணமாக அங்கு சிகிச்சை பெற்று வந்த நோயாளிகள் வீடுகள் மற்றும் ஏனைய மருத்துவமனைகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

வெளிநோயாளிகள் பிரிவில் சிகிச்சை பெற வந்த நோயாளர்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கியிருந்தனர்.

## ஜனாதிபதியையும் பிரதமரையும் காணவில்லை

பொருளாதார நெருக்கடியால் மக்கள் பல கிலோமீற்றர் தூரம் வரிசையில் நிற்பதாக குறிப்பிட்டார்.

குடிமக்கள் எதிர்கொள்ளும் உணர்ச்சி வலிக்கு சற்று நிவாரணம் தர ஜனாதிபதி குறைந்தபட்சம் ஏதாவது சொல்ல வேண்டும் என்றும் குறிப்பிட்டார்.

ரணில் விக்ரமசிங்கவை பிரதமராக கொண்டு வருவதன் மூலம் சர்வதேச சமூகத்தின் நம்பிக்கையை பெற்றலாம் என நினைத்தமை தவறானது என்றும் விமல் வீரவன்ச தெரிவித்தார்.

அவர் தேசியப்பட்டியல் மூலம் மட்டுமே நாடாளுமன்றத்துக்கு வந்த தோல்வியடைந்த வேட்பாளர் என்றும் முன்னாள் அமைச்சர் விமல் வீரவன்ச தெரிவித்தார்.

நாடாளுமன்ற உறுப்பினர்கள் விளையாட்டை விட்டுவிட்டு நாட்டில் மாற்றத்தை ஏற்படுத்த ஒன்றிணைந்து சர்வதேச சமூகத்தை அணுக வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்.

## எரிபொருள் நிரப்பு நிலையத்தில் இளைஞனை

இது தொடர்பான காணொளிகள் சமூக வலைத்தளங்களில் வெளியிடப்பட்டுள்ள நிலையில், அதனை பலரும் பகிர்ந்து வருகின்றனர்.

இது தொடாபில் மேலும் தெரியவருகையில்,

எரிபொருள் நிரப்பு நிலையங்களை கட்டுப்படுத்துவதற்கு பொலிஸாருக்கு பதிலாக இராணுவத்தினரைக் கட்டுப்படுத்த அனுப்பியதன் மூலம் இலங்கை உலக நாடுகளின் முன், மிக மோசமான தேசமாக முத்திரை குத்தப்பட்டு வருகின்றது.

இந்நிலையில், இராணுவத்தினரின் இந்த செயற்பாடு மேலும் மோசமான விளைவுகளை உலக நாடுகள் மத்தியில் ஏற்படுத்தும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், எரிபொருள் கேட்ட நபரை எட்டி உதைக்கும் இராணுவ அதிகாரி ஏற்கனவே குற்றச்சாட்டில் சிக்கியவர் என தெரியவந்துள்ளது.

இராணுவ அதிகாரி பணி என்பது மிகவும் மனிதாபிமானமிக்க ஒரு பணியாகும்.

அதனை சரியான முறையில் மேற்கொள்ள வேண்டும் என சிரேஷ்ட மனித உரிமை அதிகாரி ரஞ்சித் கீர்த்தி தெரிவித்துள்ளார். மொரட்டுவ, வாரியபொல, கம்பஹா உட்பட நாடு முழுவதும் இராணுவம் நடத்திய தாக்குதல்களுக்கு அந்தந்த இராணுவத் தலைவர்களே நேரடியாகப் பொறுப்பாளிகள் என்பதை இந்த சம்பவம் சுட்டிகாட்டுவதாக சமூக ஆர்வலர்கள் தெரிவித்துள்ளனர். இலங்கை தற்போது வரையிலும் உலக நாடுகளிடமிருந்து மனிதாபிமான உதவிகளையே பெற்று வருகிறது. வரிசையில் நிற்கும் மிகவும் ஏழ்மையான மக்களை பட்டினி சாவிலிருந்து காப்பாற்ற வேண்டும் என்பதற்காகவே இந்த உதவிகளை வெளிநாடுகள் மேற்கொள்கின்றன.

இவ்வாறான நிலையில், அரசாங்கப் படைகள் ஏழை மக்களைத் தாக்கும் போது, ஐரோப்பிய ஒன்றியம், ஜப்பான், உலக வங்கி, சர்வதேச நாணய நிதியம் மாத்திரமின்றி தமிழகத்திலிருந்தும் உதவிகளை நிறுத்த கூடும் என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

நாளுக்கு நாள் இராணுவத்தால், பொலிஸார் மீது, அரசாங்க அதிகாரிகள் மீது, வெளிநாட்டவர்கள் மீது மற்றும் குடிமக்கள் மீதான தாக்குதல்களுக்கு முப்படைகளின் தலைவர்கள், பாதுகாப்பு செயலாளர் மற்றும் ஜனாதிபதி ஆகியோர் நேரடி பொறுப்பை ஏற்க வேண்டும் என தென்னிலங்கை ஊடகமொன்று குறிப்பிட்டுள்ளது.

### இராணுவத்தினரால் உள்ளக விசாரணைகள் ஆரம்பம்

குருநாகல் யக்கஹபிட்டியவில் எரிபொருள் நிரப்பு நிலையத்தில் இராணுவ அதிகாரி ஒருவர் பொதுமகனை தாக்கிய சம்பவம் சமூக ஊடகங்களில் வைரலாகியதையடுத்து, சம்பவம் தொடர்பாக இலங்கை இராணுவத்தினரால் உள்ளக விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இராணுவ அதிகாரி ஒருவர் எரிபொருள் நிரப்பு நிலையத்தில் நபர் ஒருவரை எட்டி உதைக்கும் காணொளி சமூக ஊடகங்களில் பகிரப்பட்டதுடன், பொதுமகனை தாக்கிய அதிகாரி இலங்கை இராணுவத்தின் லெப்.கேணல் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பாக இராணுவம் உள்ளக விசாரணைகளை ஆரம்பித்துள்ளதாக இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் நிலந்த பிரேமரத்ன தெரிவித்தார் என ஆங்கில ஊடகமொன்று தெரிவித்துள்ளது.

எவ்வாறாயினும் எரிபொருள் நிரப்பு நிலையத்தின் உரிமையாளர் மற்றும் அதிகாரிகளின் கூற்றுப்படி, எரிபொருள் நிரப்பு நிலையத்தில் இருந்த ஒரு குழு எரிபொருள் விநியோக நடவடிக்கைகளுக்கு இடையூறு செய்ததாக அவர் கூறியுள்ளார்.

மேலும் பணியில் ஈடுபட்டிருந்த இராணுவம் மற்றும் பொலிஸாரின் கடமைகளுக்கு இடையூறு விளைவித்ததாகவும் அவர்கள் தகாத வார்த்தைகளால் திட்டியதாகவும் இராணுவப் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

இந்த குழு வேண்டுமென்றே எரிபொருள் நிலையத்தில் அமைதியின்மையை உருவாக்கி மோதலுக்கு அழைப்பு விடுத்திருக்கலாம் என அதிகாரிகள் சந்தேகிப்பதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, சம்பவம் தொடர்பில் இரண்டு சந்தேகநபர்கள்கைது செய்யப்பட்டுள்ளதாகவும் இராணுவப் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

## மே 9 ஆம் திகதி நடந்த சம்பவம் அரசின் சதியா?

கட்சியின் தலைமையகத்தில் நேற்று திங்கட்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து வெளியிடும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இதன்போது மேலும் தெரிவித்துள்ள அவர், நாடு எங்கும் மக்கள் தங்களின் நியாயமான பிரச்சினைகளுக்குத் தீர்வு காணக் கோரி குரல் எழுப்பத் தொடங்கியுள்ளனர்.

அரசாங்கம் இப்போது என்ன செய்ய வேண்டும்? இந்த பிரச்சனைகளை தீர்க்க வேண்டும். அல்லது அரசாங்கம் வெளியேற வேண்டும்.

ஆனால் அரசாங்கம் தற்போது நாட்டில் இன்னொரு விதமான குழப்பத்தை ஏற்படுத்த முயற்சிக்கின்றது.

அரசியல்வாதிகளை தாக்க மற்ற எதிர்க்கட்சிகளை பிரதிநிதித்துவப்படுத்தும் அரசியல் கட்சிகளுடன் இணைந்து நாங்கள் செயற்படுகிறோம் என்று தகவல் கிடைத்துள்ளதாக தெரிவித்து சமூகத்தை அச்சுறுத்த அரசாங்கம் முயற்சிக்கிறது.

அடுத்த சில நாட்களில் போராட்டங்கள் மிகத் தீவிரமான நிலைக்கு செல்லும் என்பது மிகத் தெளிவாகக் காணமுடிகிறது.

இதை சமாளிக்க அரசு வெளியிட்ட வேடிக்கையான அறிக்கையாகவே இதை பார்க்கிறோம் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## அரசுக்கு எதிரான போராட்டங்களை...

அனுரகுமார திஸாநாயக்க மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மாகாணசபை உறுப்பினர்கள் மற்றும் ஏனைய அரசியல்வாதிகளை இலக்கு வைத்து தாக்குவதற்கு முயற்சிப்பதாக தம்மீது அரசாங்கம் குற்றம் சுமத்துவதாக கூறினார்.

இலங்கையில் அரசாங்கத்தின் ஊழல் ஆட்சிக்கு எதிராக ஜே.வி.பி நாடளாவிய பீதியில் எதிர்ப்புப் போராட்டங்களை ஏற்பாடு செய்துள்ளதாக அவர் கூறினார்.

தவறான தகவல்களை பரப்புவதன் மூலம் அரசியல் இயக்கங்களுக்கு களங்கம் ஏற்படுத்தும் நோக்கில் அரசாங்கம் செயற்பட்டு வருவதாக அனுரகுமார திஸாநாயக்க குற்றம் சாட்டினார்.

பொதுப் பிரச்சினைகள் பற்றிய அறியாமை மற்றும் பொருளாதார நெருக்கடியில் இருந்து நாட்டை முன்னேற்ற இயலாமை போன்றன இதற்கு உதாரணம் என அவர் குறிப்பிட்டார்.

இதுபோன்ற மலிவான தந்திரோபாயங்களுக்கு பொதுமக்கள் பலியாக வேண்டாம் என்றும், அரசுக்கு எதிரான தங்கள் போராட்டங்களை தொடருமாறும் அவர் கேட்டுக்கொண்டார்.

# திருமலை மாவட்ட அரசாங்க அதிபருக்கு நினைவுச் சின்னம் வழங்கி வைப்பு




(எப்.முபாரக் )

திருகோணமலை மாவட்ட கங்கத்தலாவ ஐக்கிய ஊடகவியலாளர் மன்றத்தினால் இடம்பெற்ற முதலாம் ஆண்டு நிறைவு நிகழ்வு சனிக்கிழமை (2)திருகோணமலை நிலாவெளியில் இடம் பெற்றது.

இந்நிகழ்வுக்கு பிரதம அதிதியாக திருகோணமலை மாவட்ட அதிபரும் மாவட்ட செயலாளருமான பிஎன் எச்.ஜெயவிக்கிரம கலந்து கொண்டார்.

இதன் போது கங்கத்தலாவ ஊடகவியலாளர் ஒன்றியத்தினால் மாவட்ட செயலாளருக்கு ஞாபக சின்னம் வழங்கிவக்கப்பட்டது.

அதனை மன்றத்தின்தலைவர் எச்.எச்.மகிந்த சேனாரத்ன, செயலாளர் உபாலி மனுசங்க காரியவசம் ஆகியோர் இணைந்து வழங்கி கௌரவித்தார்கள்.

# யாழ் கடற்பரப்புக்குள் நுழைந்து மீனிபிடியில் ஈடுபட்ட இந்திய மீனவர்கள் 12 பேர் கைது

( வாஸ் கூஞ்ஞ)

இலங்கை கடற்பரப்புக்குள் அத்துமீறி நுழைந்து மீன் பிடியில் ஈடுபட்டதாகத் தெரிவித்து ஒரு படகில் வந்த 12 இந்திய மீனவர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ் சம்பவம் ஞாயிற்றுக்கிமை (03.07.2022) மாலை இடம்பெற்றதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை யாழ் பருத்தித்துறை கடற்பரப்புக்குள் அத்துமீறி நுழைந்து ஐஎன் டீ - பிவை - பிகே - எம்எம் 898 இலக்கமுடைய ஒரு இந்திய படகில் வந்த 12 இந்திய மீனவர்கள் மீன்பிடியில் ஈடுபட்ட போது இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் இவர்களை மயிலிட்டி மீன்பிடி துறை முகத்துக்கு கடற்படையினரால் கூட்டிச் சென்று இவர்களை திங்கள்கிழமை (04.07.2022) பருத்தித்துறை நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட இருப்பதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

# நாளை அம்பலத்தடி பிள்ளையாருக்கு எண்ணெய்க் காப்பு

( வி.ரி. சகாதேவராஜா)

வரலாற்றுப் பிரசித்தி பெற்ற கல்முனை மாநகர் நற்பிட்டிமுனை அருள்மிகு ஸ்ரீ அம்பலத்தடி விநாயகர் தேவஸ்தான மகா கும்பாபிஷேக பெருஞ் சாந்தி நிகழ்வின் எண்ணெய்க் காப்பு சாத்தும் வைபவம், நாளை(5) செவ்வாய்க்கிழமை நடைபெறவிருக்கிறது.

நாளை 5 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 5 மணி முதல் மாலை 5 மணி வரை எண்ணெய்க் காப்பு சாத்தும் நிகழ்வு இடம் பெற இருக்கின்றது .

மறுநாள் (6) ஆம் திகதி புதன் கிழமை அஷ்டபந்தன பஞ்சகுண்ட பக்ஷ பிரதிஷ்டா மஹா கும்பாபிஷேகம் இடம்பெற இருக்கின்றது என ஆலய பரிபாலன சபை பொருளாளரும் ,ஓய்வு நிலை கணித பாட உதவி கல்வி பணிப்பாளருமான எஸ்.இலங்கநாதன் தெரிவித்தார்.

குறிப்பாக ,அன்று அதிகாலை 5.56 மணி முதல் 6.44 மணி வரையிலான சுபமுகூர்த்த வேளையில் ஸ்ரீ அம்பலத்தடி விநாயகர் பெருமாளுக்கும், பரிவார மூர்த்திகளுக்கும் மகா கும்பாபிஷேக குடமுழுக்கு இடம் பெற இருக்கின்றது.

பிரதிஷ்டா பிரதம குரு ஈசான சிவாச்சாரியார் சிவ ஸ்ரீ க.கு. மோஹனாநந்த குருக்கள் தலைமையில் மகா கும்பாபிஷேகம் நடைபெற இருக்கின்றது.

கும்பாபிஷேகத்தை தொடர்ந்து 11 தினங்கள் மண்டலாபிஷேக பூஜைகள் நடைபெறும் 18 ஆம் திகதி திங்கட்கிழமை 1008 ங்குகளுடன் சகஸ்ர நாம சங்காபிஷேகம் இடம் பெறும் என்று பிரதிநிதி எஸ் .இலங்கநாதன் மேலும் தெரிவித்தார்

அதேவேளை, அன்று (18) திங்கட்கிழமை காலை 8 மணிக்கு பாற்குட பவனியும் 9 மணிக்கு சங்காபிஷேகமும் அதனை தொடர்ந்து அன்னதானமும் இடம்பெற இருப்பதாக அவர் மேலும் தெரிவித்தார்.




# கிட்டினதாஸ் திருகோணமலை றோட்டரிக் கழகத்தின் 44 ஆவது தலைவராக பதவியேற்பு




(அ . அச்சுதன்)

திருகோணமலை ரோட்டரி கழகத்தின் 44 ஆவது தலைவராக திரு நா. கிட்டினதாஸ் அவர்கள் பதவி ஏற்கும் நிகழ்வு டைக் வீதியில் உள்ள றோட்டரி அலுவலகத்தில் 03.07.2022 - ஞாயிற்று கிழமை இடம் பெற்றது.

இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக திரு சி .ஸ்ரீதரன் திருகோணமலை வலயக் கல்வி பணிப்பாளர் கலந்து கொண்டார். இவர்களுடன் ரோட்டரி மாவட்ட செயலாளர் (பொது) குமார் சுந்தரராஜா மற்றும் ரோட்டரி உதவி ஆளுநர் ராவண விஜயரட்ன ஆகியோர்களும் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள்




இவ் வைபவத்தில் திருகோணமலை ரொட்டறி கழக தலைவர் த. அகிலன் , கழகம் சார்பில் வரவேற்பு உரை நிகழ்தினார். அவரது காலத்தில், திருகோணமலை ரோட்டரி கிளப் சிறப்பாக செயல் பட்டதாகவும் அதட்கு உதவிய தனது குழு உறுப்பினர்களுக்கு நன்றி கூறி கௌரவித்தார்.

செயலாளர் க பிரபாகரன் 2021 - 2022 ஆண்டில் திருகோணமலை ரோட்டரி கழக நடவடிக்கைகள் பற்றி ஒரு சுருக்கமான விளக்கத்தை கொடுத்தார்.

இவ் நிகழ்ச்சியில் திருகோணமலை கப்பல்துறை வித்யாலயத்துக்கு ஒரு கணணித் தொகுதியும் கொப்பிகளும் கையளிக்கப் பட்ட்து.. அது போல் தம்பலகாமம் மகா வித்யாலயத்துக்கு கொப்பிகளும் கையளிக்கப் பட்ட்து..

. இதன்போது கடந்த ஆண்டின் தலைவர் த. அகிலன் புதிதாக தெரிவான தலைவர் திரு நா. கிட்டினதாஸ் அவர்களுக்கு தலமைப்பதவியை வழங்கி வாழ்த்து தெரிவித்தார்..

பிரதம விருந்தினர் திரு சி ஸ்ரீதரன் அவரது உரையில் றோட்டரிக் கழகம் இன்னலுற்ற மக்கள் மத்தியில் சிறந்த சேவை புரிவதாக பாராட்டினார். மற்றும் திருகோணமலை மாவடட கல்வி நிலைமை வீழ்ச்சியுற்றுப்பதை எடுத்துக் கூறி, அதை நல்ல முறையில் சீர் படுத்துவதட்கு றோட்டரிக் கழக உறுப்பினர்கள் பெற்றோர்கள் ஆசிரியர்களுடன் இணைந்து முன் வரவேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

# மன்னாரில் புதிய நடைமுறையில் எரிபோருள் வழங்க நடவடிக்கை

## அரச அதிபர் திருமதி ஸ்ரான்லி டிமெல்

( வாஸ் கூஞ்ஞ)

மன்னார் பகுதியில் எரிபொருள் நிலையங்களில் இடம் பெற்றுவரும் பதட்டநிலையை தணித்து வாகனம் வைத்திருப்போர் யாவரும் சுமூகமான முறையில் எரிபொருளை பெற்றுச் செல்வதற்கான நடவடிக்கையை மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ஸ்ரான்லி டிமெல் மேற்கொண்டுள்ளார்.

மன்னார் பகுதிக்கு ஓரளவு திருப்திகரமாக எரிபொருள் வருகின்றபோதும் இவைகள் சரியான முறையில் விநியோகிக்கப் படாததால் பலர் பாதிப்படைந்த நிலையில் இருந்து வருவதாக பலதரப்பட்டவர்களும் மன்னார் மாவட்ட அரசாங்க அதிபரின் கவனத்துக்கு எடுத்துச் சென்றிருந்தனர்.

இவற்றை கவனத்தில் எடுத்



துக் கொண்ட அரசாங்க அதிபர் எதிர்வரும் 05.07.2022 தொடக்கம் மன்னார் மாவட்டம் முழுவதும் பிரதேச செயலகங்கள் ஊடாக வாகனங்களுக்கென வழங்கப் பட்ட எரிபொருள் அட்டையின் அடிப்படையில் பெற்றோல் விநியோகிக்கப்படும். என்று மன்னார் மாவட்ட செயலாளர் திருமதி ஸ்டான்லிடீமெல் தெரிவித்துள்ளார். பிரதேச செயலகங்களில் உள்ள கிராம அலுவலர்கள் பிரிவுகளை இணைத்து வாகனங்களுக்கு ஒரு நாள் என இவ் எரிபொருள் வழங்கப்படும் எனவும்

ஒவ்வொரு கிராம அலுவலர் பிரிவுக்கான நேரமும் முதல் நாள் அறிவிக்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டிருப்பதுடன் சுகாதார திணைக்கள உத்தியோகத்தர்களுக்கு விஷேடமாக வழங்கப்படும் எரிபொருள் விநியோகத்தின் போது சுகாதார திணைக்களத்தினால் வழங்கப் பட்ட அட்டையுடன் பிரதேச செயலகத்தால் வழங்கப்பட்ட எரிபொருள் விநியோக அட்டையையும் கொண்டு வருதல் அவசியம் எனவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

தற்போது மாவட்டத்தின் இரண்டு ஐழுஊ நிலையத்தினால் எரிபொருள் வழங்கப்பட்டாலும் எதிர்வரும் 15ம் திகதியின் பின்னர் ஏனைய எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கும் கிடைக்கப்பெற்றால் கிராமங்களுக்கு அருகில் உள்ள நிலையங்களில் இவ் எரிபொருளை வழங்கக்கூடியதாக இருக்கும் என்றும் மன்னார் மாவட்டத்தில் மாந்தை மேற்கு பிரதேசத்தில் எரிபொருள் நிரப்பு நிலையம் இல்லாமையால் அருகிலுள்ள நிலையத்தினூடாக வழங்கப் படும்.

இதேபோன்று முசலி மற்றும் மடு பிரதேச வாகனங்களுக்கும் அண்மைய நிலையங்களிலும் குறித்த நடவடிக்கையாகவே இருக்கும் என்றும் மன்னர் மாவட்ட செயலாளர் திருமதி ஸ்டான்லி டீமெல் அவர்கள் இவ் வாறு தெரிவித்துள்ளார்.

# மருதமுனையில் 30 வயதுக்கு மேற்பட்ட அனைவருக்கும் விசேட மருத்துவ பரிசோதனை

## புதிய வேலை திட்டம் ஆரம்பம்

(ஏ.எல்.எம்.ஷினாஸ்)

மருதமுனை பிரதேச வைத்தியசாலை முன்னெடுத்துள்ள 30 வயதுக்கு மேற்பட்ட அனைவரையும் விசேட மருத்துவ பரிசோதனைக்கு உட்படுத்தி அவர்களுக்கான மருத்துவ அறிக்கை அட்டையினை வழங்கும் புதிய வேலை திட்டம் தற்போது பிரதேசத்தில் முன்னெடுக்கப் பட்டுள்ளது.

உலக வங்கியின் நிதி அனுசரணையில், கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையோடு இணைந்து

பி.எஸ்.எஸ் (கசுகு) ஆரம்ப சுகாதார சேவைகள் வலுப்படுத்தல் நிகழ்ச்சி திட்டத்தின் கீழ் இந்த புதிய வேலை திட்டத்தை

மருதமுனை பிரதேச வைத்தியசாலை முன்னெடுத்துள்ளது. முதல் கட்டமாக மருதமுனை பிரதேசத்தில் உள்ள ஆறு (06) கிராம சேவையாளர் பிரிவுகளிலும் பொதுமக்கள் வசி



க்கும் இடங்களுக்கு நேரடியாக சென்று மருத்துவ முகாம் அமைத்து ஆரம்ப சுகாதார மருத்துவ பரிசோதனையை மேற் கொண்டு அவர்களுக்கான தனித் தனியான மருத்து அட்டை வழங் கப்படவுள்ளது.

வேலை திட்டத்தின் ஆரம்ப நிகழ்வு பிரதேச பொறுப்பு வைத்திய அதிகாரி டொக்டர் ஏ.எல்.எம்.மிஹ்லார் தலைமையில் (03) மருதமுனை கலாசார மத்திய நிலையத்தில் இடம்பெற்றது. இந்த நிகழ்வில் பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின் பிரதிப் பணிப்பாளர் டொக்டர் எம்.பி அப்துல் வாஜித் பிரதம அதிதியாக கலந்து கொண்டு பொதுமக்கள் மத்தியில் உரையாற்றினார். இதில் பிரதேச மட்டத்திலான ஒருங்கிணைப்பு குழு உறுப்பினர்கள், வைத்தியசாலை அபிவிருத்தி குழு உறுப்பினர்கள், தாதி உத்தியோகத்தர்கள், சுகாதாரப் பணியாளர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

வைத்திய சிகிச்சையை பெற்றுக் கொள்வதற்காக வருகை தந்த பொதுமக்களுக்கு உணவு பழக்க வழக்கங்கள் மற்றும் இதர சுகாதார செயல்பாடுகள் குறித்தும் வைத்திய அதிகாரி டொக்டர். ஏ.எல்.எம்.மிஹ்லார் விளக்கமளித்ததுடன் நிகழ்வில் கலந்து கொண்ட அனைவருக்கும் ஏற்பாட்டாளர்கள் ஆரோக்கிய கஞ்சி வழங்கி நிகழ்வை சிறப்பித்தனர்.

# அத்தியாவசியம் என்ற வரையறைக்குள் அன்றாடத் தொழிலாளிகள், விவசாயம், ஊடகம் என்பவற்றிற்கும் முன்னுரிமை வழங்கப்பட வேண்டும்

## பாராளுமன்ற உறுப்பினர் கோ.கருணாகரம் ஜனா

(சுமன்)

அத்தியாவசிய சேவைகளுக்குள் உணவு விநியோகம், விவசாயம் போன்றவையும் கட்டாயமாக உட்படுத்தப்பட வேண்டும். இவற்றுடன் சேர்த்து, இவற்றிற்கும் மேலதிகமாக சிறு வியாபாரிகள், மீன் வியாபாரிகள், மரக்கறி வியாபாரிகள், கடலுக்குச் செல்வோர், ஓட்டோ சாரதிகள் போன்றவர்களின் சேவைகளும் அத்தியாவசியமாகத் தேவைப்படுகின்றது. ஏனெனில் அவர்களது அன்றாட வாழ்வாதரமும் இதிலேயே தங்கியிருக்கின்றது என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினரும், தமிழ் ஈழ விடுதலை இயக்கத்தின் செயலாளர் நாயகமுமான கோ.கருணாகரம் ஜனா தெரிவித்தார்.

ஜனாதிபதி கோட்டபாய ராஜபக்ச இந்த நாட்டுக்கு ஒரு சாபக் கேடு என்பதை அவருக்கு வாக்களித்த அறுபத்தொன்பது இலட்சம் மக்களுடன் சேர்த்து அனைவரும் இன்று நன்றாக உணர்ந்திருக்கின்றார்கள் எனவும் அவர் இதன் போது தெரிவித்துள்ளார்.

சமகால நிலைமை தொடர்பில் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

தற்போது நாட்டில் ஏற்பட்டிருக்கும் பொருளாதாரப் பிரச்சனை சம்மந்தமாகவே அனைவரும் பேசிக்கொண்டிருக்கின்றார்கள். அந்த வகையில் இப்பொருளாதாரப் பிரச்சனை காரணமாக எரிபொருள், எரிவாயு, பால்மா, உணவு வகைகளுக்குப் பெருந்தட்டுப்பாடு ஏற்பட்டிருக்கின்ற இந்த வேளையில் எரிபொருள் என்பது மிக முக்கியமானதாகக் கருத்தப்படுகின்றது. எரிபொருள் இல்லாவிட்டால் இந்த நாடே ஸ்தம்பிதம் அடைந்து விடும். ஏனெனில் உணவு உற்பத்தியில் இருந்து உணவு விநியோகம் போக்குவரத்து போன்ற சகல விடயங்களும் எரிபொருளை மையமாக வைத்தே செயற்படுகின்றன.

இந்த அரசு நாட்டிலே எரிபொருள் தீர்ந்து விட்டதாகவும், அத்தியாவசிய சேவைகளுக்கு மாத்திரம் அதாவது சுகாதாரம், துறைமுகம், விமான சேவைகள், உணவு விநியோகம், விவசாயம் இவற்றுக்கு மேலாக முப்படைகள், காவல்துறை போன்றவற்றை உட்படுத்தி வரையறுத்துள்ளது. ஆனாலும், அத்தியாவசிய சேவைகளுக்குள் உணவு விநியோகம் விவசாயம் போன்றவையும் கட்டாயமாக உட்படுத்தப்பட வேண்டும்.



இவற்றுடன் சேர்த்து, இவற்றிற்கும் மேலதிகமாக சிறு வியாபாரிகள், மீன் வியாபாரிகள், மரக்கறி வியாபாரிகள், கடலுக்குச் செல்வோர், ஓட்டோசாரதிகள் போன்றவர்களின் சேவைகளும் அத்தியாவசியமாகத் தேவைப்படுகின்றது. ஏனெனில் அவர்களது அன்றாட வாழ்வாதரமும் இதிலேயே தங்கியிருக்கின்றது.

எனவே அரசாங்கம் வரையறுத்துள்ள அத்தியாவசிய சேவைகளுக்குள் மேற்குறிப்பிட்ட சிறு வியாபாரிகளுக்கும், மீன் வியாபாரிகள், கடலுக்குச் செல்வோர், விவசாயிகளுக்கும் முன்னுரிமை வழங்கப்பட வேண்டும். இந்த விடயத்திலே அரசாங்கம் மேலோட்டமான முடிவுகளை எடுத்திருந்தாலும் அந்த அந்த மாவட்ட அரசாங்க அதிபர்கள் இவற்றை ஆழமாகக் கண்காணித்து செயற்படுத்த முடியும்.

மட்டக்களப்பு மாவட்டத்தைப் பொருத்தமட்டில் இங்குள்ள அரச அதிபர் உட்பட அனைவருக்கும் தெரியும் இந்த மாவட்ட மக்கள் விவசாயம், மீன்பிடியைத் தான் கூடுதலாக நம்பியிருப்பவர்கள் என்று. அத்துடன் வறுமைக்கோட்டின் கீழ் வாழ்பவர்கள், அன்றாடம் தொழில் செய்பவர்களே இந்த மாவட்டத்தில் கூடுதலாக இருக்கின்றார்கள்.

இவ்வாறானவர்களுக்கும் முன்னுரிமை கொடுப்பதற்கு நமது மாவட்ட அரசஅதிபர்தனது நிருவாகத் திறமையக்காட்ட வேண்டும். மட்டக்களப்பு மாவட்டத்தைப் பொருத்தளவில் நிருவாகம் சிறப்பாக இயங்குவதாகத் தெரியவில்லை. சீரழிந்து காணப்படுகின்றது. அன்றாடம் பெற்றோல் நிரப்பு நிலையங்களில் கூடுதலான பெண்கள் இருப்பதை அவதானிக்க முடிகின்றது. அவர்களுக்கு தங்கள் பிள்ளைகளைத் தனியார் வகுப்புகளுக்குக் கொண்டு செல்வதற்குப் பெற்றோல் தேவை.

அத்துடன் நகர்ப்புறப் பாடசாலைகளை மூடும்படியும் கிராமப்புறப் பாடசாலைகளை நடத்துமாறும் அரசாங்கம் அறிவுறுத்தல் விடுத்திருக்கின்றது. ஆனால் கிராமப்புறப் பாடசாலைகளில் கற்பிப்பவர்கள் அங்குள்ள ஆசிரியர்கள் அல்ல. அவர்களில் பலர் வெவ்வேறு பிரதேசங்களில் இருந்து சுமார் பத்து இருபது கிலோமீட்டர்களைக் கடந்து பாடசலைகளுக்கு வர வேண்டும். பொதுப் போக்குவரத்து இல்லாத பாடசாலைகளுக்கு அவர்கள் எவ்வாறு செல்வார்கள்? அவர்களுக்கெல்லாம் முன்னுரிமை கொடுக்கப்பட வேண்டும். அல்லது நகர்ப்புறப் பாடசாலைகளுக்குக் கொடுக்கும் வசதிகளை கிராமப் புறப் பாடசாலை ஆசிரியர்களுக்கும் கொடுக்க வேண்டும்.

அத்துடன் மாவட்டம் பூராகவும் தனியார் வகுப்புகளுகளை ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு நிறுத்துமாறு அரச அதிபர் ஒரு அறிவுறுத்தலை விடுக்க வேண்டும். இதனாலும் ஒரு வகையில் இந்த எரிபொருள் விடயத்தை ஓரளவுக்குக் கட்டப்படுத்தவும் முடியும்.

மேலும், அத்தியாவசிய சேவைகளுக்குள்ளே ஊடகத்துறை உள்வாங்கப்படவில்லை. ஊடகத்துறை இந்த நாட்டில் நடக்கும் நல்லது கெட்டவற்றை எடுத்துச் சென்று மக்களை விழிப்படையச் செய்வது. இந்த ராஜபக்சர்களின் காலத்தில் 40க்கும் மேற்பட்ட ஊடகவியலாளர்கள் கொல்லப்பட்டார்கள். அது வேறு வகையான அடக்குமுறை. ஆனால் இன்று மற்றுமொரு வழியில் ஊடகத்துறையினை முடக்க வேண்டும் என்பதற்காகவும், தானும் தன்னுடைய அரசும் செய்கின்ற தவறான விடயங்கள் மக்கள் மத்தியில் செல்லக்கூடாது என்ற காரணத்தினாலுமே ஊடகத்துறையை அத்தியாவசியச் சேவைக்குள் உள்வாங்கவில்லை என்று கருதுகின்றேன்.

இந்த நாடு பொருளாதார ரீதியான வீழ்ச்சியடைகின்றது என்ற அறிகுறி ஜனாதிபதியாகப்பட்டவருக்கு தெரிந்திருக்க வேண்டும். தெரிந்தும் இந்த நாட்டின் பொருளாதாரம் அதளபாதாளத்திற்குச் சென்ற பின்னர் தான் சர்வதேச நாணய நிதியத்தை நாடுகின்றார். அன்றே அவருக்கு அறிவுரை வழங்குபவர்கள் சரியாக அறிவுரை வழங்கியிருந்தால் இன்று பேச்சுவார்த்தை இடம்பெறுகின்ற இதே வேளை சர்வதேச நாணய நிதியத்தின் உதவியே கிடைத்திருக்கும். இமீது போலவே கொவிட் நிலைமையின் போதும் இந்த நாட்டைச் சீரழித்தார். சரியான நேரத்தில் தடுப்பூசிகளைப் பெறாது மக்களைக் கொன்று குவித்தார், சுற்றுலாத் துறையினை முடக்கினார். இந்த நாட்டின் ஜனாதிபதி கோட்டபாய ராஜபக்ச இந்த நாட்டுக்கு ஒரு சாபக் கேடு என்பதை இந்த நாட்டு மக்கள் இன்று நன்றாக உணர்ந்திருக்கின்றார்கள். இந்த ஜனாதிபதிக்கு அறுபத்து ஒன்பது இலட்சம் வாக்குகளை வழங்கியது தவறு என்பதை மக்கள் உணர்ந்திருக்கிறார்கள். இதனை இந்த நாட்டு ஜனாதிபதி அவர்கள் விளங்கிக் கொண்டு ஒரு நல்ல முடிவை எடுக்க வேண்டும். இந்த நாட்டு மக்களுக்கு விடிவு வர வேண்;டும் என்றால் அவருக்கு வாக்களித்த மக்கள் சொல்வதைச் செவிமடுத்துக் கேட்க வேண்டும் என்று தெரிவித்தார்.

# சிவநேசதுரை சந்திரகாந்தன் மட்டக்களப்பு இலங்கை போக்குவரத்து சாலைக்கு திடீர் விஜயம்



(எஸ்.எஸ்.அமிர்தகழியான்)

சிவநேசதுரை சந்திரகாந்தன் இலங்கை போக்குவரத்து சபையின் மட்டக்களப்பு சாலைக்கு திடீர் விஜயமொன்றினை மேற்கொண்டு பேருந்து சாலைகளின் எரிபொருள் நிரப்பு நிலையங்களினூடாக விவசாயிகளுக்கும் எரிபொருள் வழங்க நடவடிக்கை எடுத்துள்ளார்.

இதன் போது மட்டக்களப்பு பேருந்து சாலைகளிலுள்ள எரிபொருள் நிரப்பு நிலையங்கள் தொடர்பில் விரிவாக ஆராயப்பட்டுள்ளதுடன்

மட்டக்களப்பு மாவட்டத்தில் நெல் அறுவடை ஆரம்பித்துள்ளதன் காரணமாக பத்து லட்சம் லீட்டர் டீசலை இரு வாரங்களுக்குள் விவசாயிகளுக்கு வழங்கவேண்டியுள்ளதனால் பேருந்து சாலைகளில் உள்ள எரிபொருள் நிரப்பு நிலையங்களினூடாக விவசாயிகளுக்கு தடையின்றி டீசலை வழங்குவது தொடர்பாக விரிவாக ஆரயப்பட்டுள்ளது.

மேலும் எரிபொருள் நிரப்பு நிலையங்களில் பொது மக்கள் காத்திருக்கும் நேரத்தினையும் நெரிசல்களையும் குறைக்க நடவடிக்கை எடுக்குமுகமாக குறித்தசாலைகளில் பாவிக்கப்படாமலுள்ள எரிபொருள் களஞ்சியங்களினூடாக அரச உத்தியோகத்தர்களுக்கும் எரிபொருளினை வழங்குவது தொடர்பிலும் விரிவாக ஆராயப்பட்டுள்ளது.

# போக்குவரத்து கஷ்டத்தின் மத்தியிலும் எண்ணெய் காப்பு நிகழ்வில் பக்தர்கள் பலர் கலந்து கொண்டனர்





( வாஸ் கூஞ்ஞ)

இந்திய அரசாங்கத்தின் 325 மில்லியன் ரூபா நிதி உதவியுடனும் ஆலய மற்றும் வெளிநாடு உள்நாடு நலன் விரும்பிகளின் நிதியான சுமார் 480 மில்லியன் ரூபா நிதி உதவியில் 2015 ஆம் ஆண்டு தொடக்கம் புனரமைப்புக்கான வேலைகள் ஆரம்பிக்கப்பட்டு புனரமைக்கப்பட்ட மன்னாரில் பாடல் தளமாக விளங்கும் அருள்மிகு கௌரியம்மை உடனாய திருக்கேதீச்சரநாதர் திருக்கோயில் மஹாகும்பாபிஷேப் பெருவிழா வியாழக்கிழமை (30.06.2022) ஆரம்பமாகி எண்ணெய்க் காப்பு சாத்திர நிகழ்வு ஞாயிற்றுக்கிழமை காலை ஏழு மணியளவில் இடம்பெற்றது.

சிவஸ்ரீ கைலாச ராஜு குருக்கள் தலைமையில் இடம்பெற்று வரும் இன்றைய (03.07.2022) நிகழ்வில் திருக்கேதீஸ்வர ஆலய பகுதியில் நிர்மானிக்கப்பட்டிருந்த சிவன் சிலையும் பாலாவி தீர்த்தக்கரையில் அமைக்கப்பட்ட ஆறுமுகநாவலர் சிலையும் வைபவ ரீதியாக திறந்து வைக்கப்பட்டன.

அத்துடன் இன்றைய இவ் நிகழ்வில் அதாவது எண்ணெய் காப்பு சாத்து நிகழ்வில் போக்குவரத்து வசதிகள் அற்ற நிலையிலும் அதிகமான பக்தர்கள் கலந்து கொண்டிருந்தனர்.

இவ் எண்ணெய் காப்பு சாத்து நிகழ்வு திங்கள் செவ்வாய் (4,5.07.2022) ஆகிய இருதினங்களும் நடைபெற்று இவ் தினத்தின் கடைசி நாள் நண்பகல் 12 மணியுடன் நிறைவு பெறும்.

இதைத் தொடர்ந்தே 06.07.2022 அன்று புதன்கிழமை காலை 9 மணி முதல் 10.30 மணி வரையான உத்தர நட்சத்திரம் சிம்மலக்கின நன்முகூர்த்தத்தில் கும்பாபிஷேக நிகழ்வுகள் இடம்பெறும் இவ் ஆலயத்தில் சிவன் மற்றும் அம்பள் அவர்களை சுற்றி 24 சந்நிதிகள் காணப்படுகின்றன. இவர்களுக்கே இவ் கும்பாபிஷேகம் நடைபெறும் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இவ் கும்பாபிஷேக நிகழ்வுக்கு இலங்கையிலுள்ள பிரசித்திப் பெற்ற குருக்கள் சிவச்சாரிகள் அத்துடன் இந்தியாவிலிருந்தும் வருகை தந்துள்ள குருக்களும் மற்றும் நல்ல ஆதின சுவாமிகளும் பலர் கலந்து கொள்ளுகின்றனர்.

# உகந்தை மலை முருகன் ஆலய ஆடி வேல் விழா யூலை 29 இல் ஆரம்பம்

( காரைதீவு சகா)

வரலாற்றுப் பிரசித்தி பெற்ற உகந்தை மலை முருகன் ஆலய வருடாந்த ஆடி வேல் விழா உற்சவம் யூலை மாதம் 29 ஆம் தேதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது.

தொடர்ந்து 13 நாட்கள் திருவிழாக்கள் இடம்பெற்று ஆகஸ்ட் 11-ஆம் தேதி தீர்த்த உற்சவத்துடன் நிறை வடையை இருப்பதாக ஆலய பரிபாலன சபை தலைவர் சுதநிலமே திசாநாயக்க தெரிவித்தார்.

ஆடிவேல் விழா உற்சவத்தை முன்னிட்டு தற்பொழுது நீர்ப்பாசன திணைக்களம் சிவதொண்டன் அமைப்பு உட்பட பல அமைப்புகள் ஆலய வளாகத்தில் சிரமதானத்தில் ஈடுபட்டு வருகின்றன.

விரைவில் உற்சவத்திற்கான ஆலய பரிபாலன சபை கூட்டம் நடைபெறவிருப்பதாக தலைவர் மேலும் தெரிவித்தார்.

# புதனன்று ஓந்தாச்சிமடம் வட பத்திரகாளி அம்பாள் ஆலய தீ மிதிப்பு

( காரைதீவு நிருபர் சகா)

ஓந்தாச்சிமடம் ஸ்ரீ வடபத்திரகாளி அம்பாள் ஆலய வருடாந்த சக்தி விழாவின் தீமிதிப்பு வைபவம் நாளை (6) புதன்கிழமை நடைபெறவிருக்கிறது.

இவ் உற்சவம் கடந்த 28 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை கதவு திறத்தலுடன் ஆரம்பமாகியது.

தொடர்ச்சியாக எட்டு தினங்கள் பூசைகள் இடம்பெற்று வந்தன. நாளை (06.07.2022) புதன்கிழமை காலை தீமிதிப்பு சடங்கு நடைபெறவிருக்கிறது.

கடந்த 28 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை ஸ்ரீ கற்பக விக்னேஸ்வரர் முத்துமாரி அம்மன் தேவஸ்தானத்தில் இரவு ஆறு மணிக்கு அம்பாள் எழுந்தருளச்செய்யும் நிகழ்வு இடம்பெற்று இரவு பத்தரை மணி அளவிலே அம்பாளின் தேவஸ்தான திருக்கதவு திறக்கும் நிகழ்வு இடம்பெற்றது.

ஏழு நாட்களும் காலை 7 மணிக்கு காலை பூஜை நண்பகல் பூசை 12 மணிக்கும் இரவு பூசை 5 மணிக்கும் இடம்பெற்றுவந்தது.

நேற்று முன்தினம்(3) ஞாயிற்றுக்கிழமை வீர கம்பம் வெட்டு நிகழ்வும், வாழைக்காய் எழுந்தருளச் செய்யும் நிகழ்வும் இடம்பெற்றது. இன்று 4ஆம் தேதி திங்கட்கிழமை அம்பாள் முத்து சப்பரத்தில் வீதி வலம் வர இருக்கிறார்.

ஐந்தாம் நோர்ப்பு நெல் குற்றும் நிகழ்வு இடம்பெற்று ,சக்தி பூஜையும் இடம்பெற்று தீ மூட்டுதல் நிகழ்வும் இடம்பெறும்.

நாளை 6 ஆம் தேதி புதன்கிழமை காலை 6 மணிக்கு தீமிதிப்பு சடங்கு இடம்பெறும். அதைத்தொடர்ந்து வாழி பாடும் நிகழ்வும் இடம்பெறும் .

சடங்கு பூஜை யாவும் ஸ்ரீ வடபத்திரகாளியம்மன் ஆலய பிரதமகுரு அருட்கலைத்திலகம் விஸ்வப்பிரம்மஸ்ரீ செ.சற்குணராஜா உதயன் குருக்கள் தலைமையில் இடம்பெறுகின்றது .

தீமிதிப்பு வைபவம் நாளை புதன்கிழமை காலை 6 மணிக்கு இடம்பெறும் என்று ஸ்ரீ அரசடி விநாயகர் தேவஸ்தானம், ஸ்ரீ படபத்திரகாளி அம்மன் தேவஸ்தானம் ,ஸ்ரீ முருகன் ஆலயங்களின் பரிபாலன சபையினர் தெரிவிக்கின்றார்கள்.

# அவுஸ்திரேலியா செல்ல முற்பட்டு திருமலையில் கைது செய்யப்பட்ட ஐந்து சிறுவர்கள் விடுதலை

## 41 பேருக்கு விளக்கமறியல்

(ரவ்பீக் பாயிஸ் )



திருகோணமலை ஜமாலியா கடற்பரப்பிலிருந்து சட்டவிரோதமாக அவுஸ்திரேலியா செல்ல முற்பட்டு கைது செய்யப்பட்ட சந்தேகநபர்களை எதிர்வரும் 15 ஆம் திகதி வரை விளக்கமமறியலில் வைக்குமாறு திருகோணமலை நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

திருகோணமலை நீதிமன்ற நீதவான் பயாஸ் ரசாக் முன்னிலையில் நேற்று முன்தினம் இரவு (03) 9.30 மணியளவில் குறித்த சந்தேக நபர்களை ஆஜர்படுத்திய போதே இக்கட்டளை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

கைது செய்யப்பட்ட 03 தாய்மார்களையும்,02 பெண்களையும் 25000 ரூபாய் சரீர பிணையில் செல்வதற்கு கட்டளை பிறப்பிக்கப்பட்டுள்ளதுடன், ஐந்து சிறுவர்களை விடுவிக்குமாறும் நீதவான் உத்தரவிட்டார்.



குறித்த நபர்கள் கம்பஹா அம்பாறை திருகோணமலை யாழ்ப்பாணம் வவுனியா மட்டக்களப்பு பகுதிகளைச் சேர்ந்தவர்கள் எனவும் பொலிசார் தெரிவித்தனர்.

அத்துடன் கைது செய்யப்பட்ட குறித்த சந்தேக நபர்களில் ஒருவர் சுகயீனமுற்றிருப்பதினால் குறித்த நபரை வைத்தியசாலையில் அனுமதிக்குமாறும் குறித்த நபரை 15ம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறும் நீதிவான் பொலிஸாருக்கு கட்டளையிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# ஒருவேளை உணவுக்கு கையேந்தி நிற்கும் அவல நிலை

## காரைதீவில் யாழ் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சித்தார்த்தன் உரை

(வி.ரி.சகாதேவராஜா)

மக்கள் ஒருவேளை உணவுக்கு கையேந்தி நிற்கும் துர்ப்பாக்கிய நிலை தோன்றியுள்ளது..இன்று நாட்டில் தோன்றியுள்ளதுர்ப்பாக்கிய சீரழிவுகள் இந்த காலத்தில் முடிவுக்கு வரப் போவதில்லை. இது தீர்வதற்கு நீண்ட காலம் எடுக்கும்.இதற்கு தமிழ் மக்கள் பழக்கப் பட்டவர்கள். வருவதை நம்பிக்கையோடு எதிர் கொள்ளுங்கள்.

இவ்வாறு தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்தின் தலைவரும் யாழ் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான தர்மலிங்கம் சித்தார்த்தன் காரைதீவில் தெரிவித்தார்.

தமிழீழ விடுதலைக் கழகத்தின் அம்பாரை மாவட்ட முன்னாள் தளபதி அமரர் மகாதேவன் சிவனேசன் அவர்களின் முதலாவது ஆண்டு நினைவு நாளில் உரையாற்றுகையிலே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இந்த நிகழ்வு காரைதீவு விபுலானந்த மைதானத்தில் கடந்த சனிக்கிழமை) மாலை கழகத்தின் அம்பாறை மாவட்ட பொறுப்பாளர் பி .ரவிச்சந்திரன் சங்கரி தலைமையில் நடைபெற்றது.

முதலாவது ஆண்டு நினைவு நாளை ஒட்டி இடம்பெற்ற மென்பந்து கிரிக்கெட் சுற்றுப் போட்டியின் இறுதி போட்டியில் காரைதீவு ஜோலி கிங்ஸ் அணியினரை எதிர்த்து போட்டியிட்ட வீரமுனை விஷ்ணு அணியினர் வெற்றி வாகை சூடி இருந்தனர்.

பரிசளிப்பு விழாவில் பிரதம அதிதியாக கலந்து கொண்ட பாராளுமன்ற உறுப்பினர் தர்மலிங்கம் சித்தார்த்தன் மேலும் உரையாற்றுகையில்.

இன்று நாட்டில் மிகவும் மோசமான பொருளாதார சீரழிவு இடம்பெற்றுக் கொண்டிருக்கின்றது. அனைத்து மக்களும் பல சிக்கல்களையும் சவால்களையும் எதிர்நோக்கி வருகின்றனர்.

ஒரு வேளை உணவுக்கும் கையேந்தி நிற்கும் துரதிஸ்டவசமாக நிலைமை தோன்றி இருக்கின்றது.

இது இன்று நாளை முடிவடையப் போவதில்லை.

இதேவேளை தமிழ் மக்களுடைய பிரச்சினைகள் தீர்க்கப்பட வேண்டும் என்று நாங்கள் தொடர்ச்சியாக கூறிக் கொண்டிருக்கிறோம். மாறி மாறி வந்த அரசாங்கங்கள் எமது கோரிக்கையை ஏற்றுக்கொள்ளாது விட்ட காரணத்தினால் நாடே சீரழிந்து கொண்டிருக்கிறது

தமிழ் மக்களது பிரச்சினைகள் நிச்சயமாக தீர்க்கப்படவேண்டும். எமது காலத்திலே தீர்க்கப்படாவிட்டால் அடுத்த சந்ததிக்கு இது எத்திவைக்கப்பட வேண்டும் என்பதற்காக இத்தகைய நிகழ்ச்சிகளையும் ஏனைய நிகழ்ச்சிகளையும் அவ்வப்பொழுது செய்து வருகின்றோம்.

தமிழ்மக்களது கனவு நிறைவேற வேண்டும். தமிழ் மக்களது கோரிக்கைகள் தொடர்ச்சியாக முன்னெடுத்து நல்லதொரு தீர்வு காணப்பட வேண்டுமானால் அடுத்த சந்திக்கு இந்த விடயம் ஏற்றி வைக்கபடவேண்டும்.

இப்படியான நிகழ்வுகள் தொடராக நடக்க வேண்டும்.

எண்பதுகளில் எமது கட்சியின் முக்கிய தளபதிகளில் ஒருவராக செயல்பட்டவர் இந்த மண்ணை சேர்ந்த பக்தன் எனும் சிவனேசன் அவர்கள். அவர் சிறப்பாக செயல்பட்டார். இளைஞர்களிடையே மிகுந்த துணிவை ஏற்படுத்தியவர் தளபதி பக்தன் .அவரது ஞாபகார்த்தமாக இங்கே தற்போதைய அமைப்பாளர் சங்கரி ஏற்பாடு செய்த இந்த கிரிக்கெட் சுற்றுப் போட்டியும் பரிசளிப்பு விழாவும் உண்மையிலேயே சந்தோஷமாக இருக்கிறது. வாழ்த்துக்கள்.

இதேவேளை இந்த நிகழ்வில் மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற



உறுப்பினர் கோவிந்தன் கருணாகரம் (ஜனா) ,வடக்கு மாகாண முன்னாள் விவசாய அமைச்சர் க. சிவனேசன், முன்னாள் வட மாகாண சபை உறுப்பினர் த.கஜதீபன் ,காரைதீவு பிரதேச சபை தவிசாளர் கிருஷ்ணபிள்ளை ஜெயசிறில், காரைதீவு பிரதேச செயலாளர் சிவ ஜெகராஜன் ,உதவி கல்வி பணிப்பாளர் வி.ரி சகாதேவராஜா ஆகியோர் உரையாற்றினார்.

மேலும் பல அதிதிகள் கலந்து சிறப்பித்தார்கள். திருமதி சிவனேசன் அவர்களும் கலந்து கொண்டு சிறப்பித்தார்.

### தவிசாளர் ஜெயசிறில் உரை

நாட்டிலேயே ஒரு குடும்பம் வாழ்வதற்காக 2 கோடி மக்கள் செத்துக் கொண்டிருக்கின்றனர். அந்த ஒரு குடும்பத்தின் அராஜக ஆட்சி வழிநடத்தலில் ஏற்கனவே தமிழ் மக்கள் சொல்லொணா துயரங்களை அனுபவித்தனர். இன்று முழு நாட்டு மக்களும் அவர்களது ஆட்சியில் பசிபட்டினியால் சீரழிந்து கொண்டிருக்கிறார்கள் என்று காரைதீவு பிரதேச சபை தவிசாளர் கிருஷ்ணபிள்ளை ஜெயசிறில் தெரிவித்தார்.

அவர் மேலும் உரையாற்றுகையில்..

ஒரு குடும்பம் வாழ வேண்டும் என்பதற்காக இன்று நாட்டு மக்கள் அனைவரும் பசி பட்டினியோடு வரிசையில் காத்து இருக்கிறார்கள் .

அவரை ஆட்சி பீடம் அமர்த்திய அதே மக்கள் இன்று 'வீட்டுக்குப் போ..' என்று பரவலாக ஆர்ப்பாட்டம் செய்கிறார்கள்.

அவர் அதனை கண்டு கொள்ளாமல் இறுமாப்புடன்பதவி விலகாமல் மக்களை மேலும் மேலும் வதைத்து கொண்டிருக்கிறார்.

1990களில் தமிழர்கள் ஒரு லிட்டர் பெட்ரோல் வாங்க 1500 ரூபாய் செலவழித்தார்கள். அது மாத்திரமல்ல வரிசை என்பது அவர்களுக்கு அத்துப்படி .

எனவே தமிழர்கள் எத்தகைய சவால்களையும் எதிர்கொள்ள கூடியவர்கள் .

இன்று நாடு அழுதுகொண்டே காலத்தை கடத்துகிறது. ஒரு குடும்பம் வாழ்வதற்காக, அவர்களைக் காப்பாற்ற வந்த நரி வாழ வேண்டும் என்பதற்காக இரண்டு கோடி மக்களையும் கொன்று கொண்டிருக்கின்றனர்.

இவர்கள் வீட்டுக்கு போனால் நாட்டுக்கு நன்மை கிடைக்கும்.

தமிழர்களை கொல்ல எந்த நாடுகளில் பணம் பெற்றார்களோ அதே நாடுகள் இன்று இவர்களை ஒதுக்குகிறது.

இன்று இவர்களின் அராஜகம் காரணமாக நாடு பெற்ற கடனை அடைக்க முடியாமல் திண்டாடுகின்றது. தமிழர்கள் நினைத்தால் இந்த கடனை அடைப்பதற்கு நிச்சயமாக உதவ முடியும். எமது புலம்பெயர் தமிழ் மக்கள் ஒரு கணம் நினைத்தால் இதனை அடைப்பது பெரிய விடயமல்ல .

ஆனால், இவர்கள் வீட்டுக்கு போகவேண்டும் .வடக்கு கிழக்கில் சுயநிர்ணய உரிமையுடன் கூடிய சுதந்திரத்தை இந்த அரசு வழங்குமானால் நாடு இந்த கடனை அடைக்க அவர்களால் முடியும் என்பதை தெரிவித்து கொள்கிறேன். என்றார்.

### வடமாகாண சபை உறுப்பினர் கஜதீபன் உரை

ஒரு முன் பள்ளி மாணவருக்கு இருக்கின்ற அறிவு ஆற்றல் இல்லாத ஜனாதிபதியை நாட்டு மக்கள் தெரிவு செய்திருக்கிறார்கள். அதன் விளைவை அனைத்து மக்களும் இன்று அனுபவிக்கிறார்கள். இந்த கடினமான காலகட்டத்தை மிகுந்த நம்பிக்கையோடு கடக்கவேண்டும் என்று முன்னாள் வட மாகாண சபை உறுப்பினர் கஜதீபன் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில்.

இன்றைய இளைஞர்கள் விளையாடுவதற்கு நேரமில்லாமல் பெற்றோலுக்கும் டீசலுக்கும் வரிசையில் நிற்கும் துயரங்களை பார்க்கிறோம். மகிழ்ச்சியாக திரிய வேண்டிய நேரத்தில் எரிபொருள் நிரப்பு நிலையங்களில் வரிசையில் வதை அனுபவிப்பதை காண்கிறோம் எமது தமிழ் சமுதாயம். அவர்கள் செய்த பாவம் என்ன? இந்த நாட்டிலே பிறந்தது குற்றமா?

தமிழ் இனம் இந்த நாட்டிலே பல நெருக்கடிகளை பல சவால்களை இந்த கண்டு வந்திருக்கிறது. எதையும் தாங்கிய இதயம் படைத்தவர்கள் தமிழர்கள் .

அந்த வகையில் இன்றைய பொருளாதார நெருக்கடி தமிழர்களுக்கு ஒரு சவால் அல்ல . இந்த நெருக்கடி நிலை நாளை மாறலாம் அல்லது அது உச்சக்கட்டத்தை அடையலாம் .எதுவானாலும் .எமக்கு நம்பிக்கை தேவை ஒரு காலத்தில் இந்தியாவும் சுதந்திரம் பெறுவதற்காக மகாத்மா காந்தி தலைமையில் அகிம்சை போராட்டத்தை நடத்தியது. புதிய உலக ஒழுங்குக்கு ஏற்ப இந்தியாவுக்கு சுதந்திரம் வழங்கப்பட்டது. காந்தியின் அகிம்சைப் போராட்டத்துக்கு அப்பால் கால ஒழுங்கினால் அந்த சுதந்திரம் வழங்கப்பட்டது .

அதன் ஒரு பகுதியாகவே இலங்கைக்கு சுதந்திரம் கிடைத்தது . ஆனால் தமிழர்கள் எமக்கு இன்னும் சுதந்திரம் கிடைக்கவில்லை.

நாட்டை விற்று உணவு வழங்க வேண்டிய கேவலமான நிலையில் அரசு இருக்கின்றது. இந்த கடினமான காலத்தை நாம் நம்பிக்கையோடு கடக்க வேண்டும் .

நாம் உச்சகட்ட பொருளாதார நெருக்கடிகளை கடந்த காலங்களில் சந்தித்தவர்கள். நம்பிக்கையோடு பீனிக்ஸ் பறவை போல் நாம் மீண்டும் எழ வேண்டும். இன்றைய பொருளாதார நெருக்கடியை விட எத்தனையோ சவால்களை சந்தித்தது தமிழினம். நிலைமையை சமாளித்து கொண்டு எதையும் தாங்கிக் கொண்டு முன்னேற வேண்டும்..

மைதானத்தில் அதிக வியர்வை சிந்தி இருந்தாரோ அவர் அன்று நன்றாக நித்திரை கொள்வார்.

வடக்குக்கும் கிழக்குக்கும் உறவுப் பாலம் அமைத்தவர் இந்த மண்ணில் பிறந்த தமிழ்ப்பேராசிரியர் விபுலானந்த அடிகள். அவர்கள் மானிப்பாய் இந்துக் கல்லூரியிலே கற்பித்தல் போது எனது அப்பாவும் தாத்தாவும் அவரிடம் தமிழ் படித்தவர்கள் . யாழ் மக்கள் தமிழை உச்சரிப்பதற்கும் தமிழை செம்மையாக பேசுவதற்கும் வழி வகுத்தவர் சுவாமி விபுலானந்த அடிகள். அவர் பிறந்த மண்ணிலே நின்று பேசுவதில் பெருமையடைகிறோம். எமது கட்சியின் தளபதி ஆக இருந்த பத்தனின் நினைவிலே பங்கு கொள்கிறோம் .எமது கட்சியின் கொடியை எமது தலைவர் ஏற்றி இங்கு ஆரம்பித்து வைத்தார் .சந்தோசமாக இருக்கின்றது. தமிழ் மக்களே எதையும் தாங்கும் வல்லமை படைத்தவர்களே இந்த கடினமான காலத்தை கவனமாக கடக்க வேண்டும். என்றார்.

### தேசிய மாகாணமட்ட சாதனையாளர்களுக்கு பாராட்டு கௌரவம்.

நிகழ்வில் ,தெற்காசிய தேசிய மற்றும் மாகாண மட்டங்களில் சாதனை படைத்த விளையாட்டு வீரர்கள், கல்வி ஊடகவியலாளர்கள், மற்றும் சமூக செயற்பாட்டாளரை பாராட்டி கௌரவித்தனர்.

இந்த நிகழ்வில், யாழ் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும், தமிழீழ விடுதலை கழகத்தின் தலைவருமான தர்மலிங்கம் சித்தார்த்தன் உள்ளிட்ட அதிதிகள் கலந்துகொண்டு பொன்னாடை போர்த்தி கௌரவத்தை வழங்கினார்கள் .

ஊடக துறைக்காக ஜனாதிபதி விருது பெற்ற ஊடகவியலாளர் வி.ரி. சகாதேவராஜா பொன்னாடை போர்த்தி ''ஊடகமாமணி ''என்ற பட்டம் வழங்கி கௌரவிக்கப்பட்டார். யாழ்ப்பாணம் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் தர்மலிங்கம் சித்தார்த்தன் இக் கௌரவத்தை வழங்கினார்

தொடர்ந்து, மாகாணத்திலே குண்டு போடுதல் நிகழ்வில் தங்கப் பதக்கம் பெற்ற பே.அனோஜன், ஹொக்கி நிகழ்வில் தேசிய சாதனை படைத்த த.லவன், தெற்காசிய கராத்தே போட்டியில் சாதனை படைத்த சௌ.பால்ராஜ், தேசிய மட்ட கராத்தே போட்டியில் சாதனை படைத்த ப.சரோன் சச்சின் ,மாகாண மட்ட கராத்தே போட்டியில் சாதனை படைத்த செல்வி.கு அட்சயா ,மாகாணமட்ட மல்யுத்தப் போட்டியில் சாதனை படைத்த சு.அஜித் ராஜ், மாகாணமட்ட பீச் கபடி போட்டியில் சாதனை படைத்த இ. நிரோஜன் ஆகியோர் பொன்னாடை போர்த்தி நினைவுச் சின்னம் வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

விசேடமாக மரணித்த சமூக செயற்பாட்டாளர் செ.மணிச்சந்திரன் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டார்..

புளொட் அமைப்பின் அம்பாறை மாவட்ட முன்னாள் போராளிகளின் குடும்பங்களுக்கு வாழ்வாதார உதவி வழங்கப்பட்டது.

# கிண்ணியா சமூக சேவகி நளீமா இந்தியாவில் கௌரவிப்பு!



(எப்.முபாரக் )

இந்தியாவின் ஐக்கிய நுகர்வோர் பாதுகாப்பு மற்றும் சட்ட உரிமைகள் அமைப்பின் தலைமை அலுவலகமான சென்னை தியாகராய நகர் வடக்கு உஸ்மான் ரோட்டில் அமைந்திருக்கும்அலுவலகத்தில்இலங்கை பெண்கள் உதவி அமைப்பின் தலைவியும் சமூக செயற்பாட்டாருமான பெண் ஆளுமையான நளீமா தனது சமூகசேவைக்காக அண்மையில் பொண்ணாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டார்.

அதேவேளை சமூக செயற்பாட்டாளர் நளீமா ஐக்கிய மக்கள் பாதுகாப்பு நுகர்வோர் அமைப்பின் இலங்கைக்கான வதிவிடப் பிரதியாக நியமிக்கப்பட்டுள்ளார். அதற்கான அடையாள அட்டையும் அவருக்கு வழங்கி வைக்கப்பட்டது.

இந்நிகழ்வு ஐக்கிய நுகர்வோர் பாதுகாப்பு மற்றும் சட்ட உரிமைகள் அமைப்பின் நிறுவனத் தலைவர் லயன் அம்பாசிடர் முனைவர் ந. இராமசந்திரன் அவர்களின் தலைமையில் நடைபெற்றது. மேலும் இந்நிகழ்வில் அமைப்பின் மாநிலத் தலைவர் முனைவர் ஏ. செல்வராஜ், மாநில பொதுச் செயலாளர் முனைவர் என்என். வர்மன், மாநில செயலாளர் முனைவர் ஜி. மணிவண்ணன் மாநில பிஆர்ஒ. திரு எஸ்.குணசேகரன், மாநிலத் தலைவர் லஞ்ச ஒழிப்புப் பிரிவு மருத்துவர் பூபாலன், திருவள்ளூர் மாவட்ட செயலாளர் திரு.கே. மகேந்திரன் ,தென்சென்னை மாவட்ட துணைத் தலைவர் திரு கோபிநாத் மற்றும் அமைப்பின் புதிய பொறுப்பாளர்களான திரு பிரகாஷ், சுந்தர், தியாகராஜன் ஆகியோரும் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

# சம்மாந்துறையில் அகோர மாரியம்மனின் பாற்குடபவனி





( காரைதீவு நிருபர் சகா)

வரலாற்றுப் பிரசித்தி பெற்ற சம்மாந்துறை கோரக்கோயில் அகோர மாரியம்மன் கோவிலின் வருடாந்த தீ மிதிப்பு சடங்கின் ஓரங்கமாக பாற்குடபவனி (4) திங்கட்கிழமை நடைபெற்றது.

சம்மாந்துறை ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் ஆலயத்தில் இருந்து பாற்குடபவனி ஆரம்பமாகியது.

ஆலய நிர்வாகிகளான த.அழகுராஜன் ,எஸ். சசிகுமார் ,உபயகாரர் தவிசாளர் கிருஷ்ணபிள்ளை ஜெயசிறில் ஆகியோர் பிரதான கும்பங்களை தாங்க நூற்றுக்கணக்கான பெண்கள் பால்குடம் ஏந்தி வந்தார்கள் .

சுமார் இரண்டு கிலோமீட்டர் தூரம் நடந்து கோரக் கோயில் அகோரமாரியம்மன் ஆலயத்தை சென்றடைந்ததும் அங்கு தலைமைப் பூசகர் மாரிமைந்தன் மு.ஜெகநாதன் ஐயாவின் கிரியைகளோடு பாற்குடம் சொரிதல் சிறப்பாக நடைபெற்றது.

அதனை தொடர்ந்து அன்னதான நிகழ்வு பெற்றது.






# கதிர்காமத்திற்கான காட்டுப்பாதை யூலை ௨௨ முதல் ஆகஸ்ட் ௫ வரை திறந்திருக்கும்!

## உகந்தையில் அம்பாறை அரச அதிபர் மாநாட்டில் தீர்மானம்!





(வி.ரி. சகாதேவராஜா)

வரலாற்றுப்பிரசித்திபெற்ற கதிர்காம ஆடி வேல்விழாவிற்குச் செல்லும் பாதயாத்திரீகர்களுக்கான காட்டுப்பாதை எதிர்வரும் 22ஆம் திகதி திறக்கப்படும். மீண்டும் அது ஆகஸ்ட் மாதம் 05ஆம் திகதி மூடப்படும்.

இவ்வாறு அம்பாறைமாவட்ட அரசாங்க அதிபர் ஜே.எம்.ஏ.டக்ளஸ் தலைமையிலான மாநாட்டில் தீர்மானிக்கப்பட்டது. உகந்த மலை முருகனாலய வருடாந்த ஆடிவேல் விழா உற்சவம் மற்றும் காட்டுப் பாதை திறப்பு தொடர்பிலான முன்னோடிக்கூட்டம் நேற்று முன்தினம்(1) பகல் உகந்தை முருகன் ஆலய வளாகத்தில் நடைபெற்றபோதே மேற்படி தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

எதிர்வரும் 22ம் திகதி உகந்தை முருகன் ஆலயத்தில் காலை 6 மணிக்கு இடம்பெறும் பூசை வழிபாடுகளை தொடர்ந்து காலை 7 மணிக்கு உத்தியோக பூர்வமாக காட்டுவழிப்பாதை யாத்திரிகர்களுக்காக திறந்துவிடப்பட இருக்கின்றது.

அன்றைய தினம் பி.ப 3 மணிக்கு மூடப்படும் பாதை தொடர்ந்து வரும் 14 நாட்கள் அதாவது ஆகஸ்ட் மாதம் 5ம் திகதி வரை காலை 6 மணிக்கு திறக்கப்பட்டு மாலை 3 மணிக்கு மூடப்படுமென தெரிவிக்கப்பட்டுள்ளது.

கதிர்காமம் முருகனா லயத்தின் வருடாந்த ஆடிவேல் விழா உற்சவம் இம் மாதம் 29 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி ஆகஸ்ட் மாதம் 12ஆம் திகதி தீர்த்தோற்சவத்துடன் நிறைவடையவிருப்பது தெரிந்ததே.

அதேவேளை உகந்தை மலை முருகனாலயத்தின் வருடாந்த ஆடிவேல் விழா உற்சவம் இம் மாதம் 29ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி ஆகஸ்ட் மாதம் 11ஆம் திகதி தீர்த்தோற்சவத்துடன் நிறைவடையவிருக்கிறது.

மேற்படிகூட்டத்தில் அம்பாறை அரச அதிபர் ஜே.எம்.ஏ.டக்ளஸ் மொனராகல மாவட்ட செயலக பிரதிநிதி அம்பாறை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் வே.ஜெகதீசன் ஆலயபிரதமகுரு சிவஸ்ரீ சீதாராம் குருக்கள் பாணமை விகாராதிபதி வண.சந்திரரத்ன ஹிமி ஆலயதலைவர் சுதுநிலமே திசாநாயக பொத்துவில், லாஹூகல, ஆலயடிவேம்பு ஆகியவற்றின் பிரதேச செயலாளர்கள், முப்படைகளின் பிரதிநிதிகள், பொலிஸ் பிரதிநிதி, வன இலாகாவின் பிரதிநிதி, பொத்துவில் பிரதேசசுகாதார வைத்திய அதிகாரி, லாஹூகல பிரதேச சபையின் பிரதிநிதி, நீர் வழங்கல் மற்றும் வடிகால் அமைப்பு சபையின் பிரதிநிதி, மொணறாகலை மாவட்ட செயலகத்தின் பிரதிநிதி ஆகியோருடன் பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

கலந்துரையாடலின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த மேலதி அரசாங்க அதிபர் ஜெகதீசன் நாட்டின் தற்போதைய இக்கட்டான சூழ்நிலையில், எரிபொருள் மற்றும் வளப்பற்றாக்குறைகள் இருக்கின்றபோதும் யாத்திரிகர்களின் தேவைகளை பூர்த்திசெய்கின்ற வகையில் திணைக்களங்கள் அர்ப்பணிப்பான சேவையை வழங்க முன்வந்திருப்பதாகவும் யாத்திரிகர்கள் குடிநீர் போன்றவற்றை சிக்கனமாக பயன்படுத்தி அதிகாரிகளுக்கு ஒத்துழைப்பு வழங்கவேண்டுமெனவும் கேட்டுக்கொண்டமை குறிப்பிடத்தக்கது. அங்கு எடுக்கப்பட்ட தீர்மானங்கள் வருமாறு .

காட்டுப்பாதை இம் மாதம் 22ஆம் திகதி முதல் 14நாட்கள் திறந்திருக்கும்.

அக்காலப்பகுதியில் காட்டுப்பாதையால் பயணிப்போர் பொலித்தீன்பாவனையை முற்றாகத் தடைசெய்யவேண்டும். அன்னதானம் வழங்குவோர் பார்சலில் வழங்கமுடியாது. மாறாக ஆலய அனுமதியுடன் பீங்கானில் வழங்கவேண்டும். ஆலயத்திற்கு வரும் அடியார்கள் பாதயாத்திரீகர்கள் அனைவருக்குமாக 31 தண்ணீர்த்தாங்கிகள் வைக்கப்படவேண்டும். இராணுவம் விசேடஅதிரடிப்படை இதற்கு பொறுப்பாக்கப்பட்டுள்ளது. திருக்கோவில் ஆலையடிவேம்பு மற்றும் லாகுகல பிரதேசசபைகள் தண்ணீர்பவுசர்களை வழங்கும். அம்பாறைக்கச்சேரியும் ஒரு வவுசரை வழங்கும்.

விசேடஅதிரடிப்படை இராணுவம் தண்ணீரை நிரப்பிவைக்கும். காட்டுப்பாதையால் செல்லும் யாத்திரீகர்களுக்கான பாதுகாப்பை பொலிஸ் வனஜீசராசிகள் திணைக்களம் இராணுவம் என்பன இணைந்துவழங்கும்.

உகந்தயையடுத்துள்ள குமண பறவைகள் சரணாலய முன்றலில் யாத்திரீகர்கள் கணக்கெடுப்பொன்றுக்கு உள்ளாக்கப்படுவார்கள்இறுதியாக 2020 ஆம் ஆண்டில் சுமார் 25ஆயிரம் பாதயாத்திரீகர்கள் பயணித்துள்ளனர்.

எனினும் கொரோனா காரணமாக கடந்த இரண்டு வருடங்களாக இக் காட்டுப் பாதை திறக்கப்படவில்லை. ஆதலால் பாதை காடு மண்டிக்காணப்படும். அத்துடன் மிருகங்களின் நடமாட்டமும் அதிகமாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. எனவே வனஜீவராசிகள் திணைக்களம் மற்றும் இராணுவ பாதுகாப்பு மேற்கொள்ளப் படவுள்ளன.

இதேவேளை இவ்வாண்டு மேலும் ஆயிரக்கணக்கான அதிக அளவான பக்தர்கள் பாதயாத்திரையில் பயணிக்கலாம் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

இராணுவமும் வனஜிவராசிகள் திணைக்களமும் இணைந்து இக்கணக்கெடுப்பை எவ்வித கெடுபிடியுமின்றி நடாத்துவர். உகந்தை மலை முருகன் ஆலயவளாகத்தில் மின்சார வசதி சுகாதாரவசதி யாத்திரீகர்களுக்கு நிறைவாக ஏற்படுத்திக்கொடுக்கப்படும். மலசலகூடவசதியும் சுத்தமாக வழங்கப்படும்.போக்குவரத்து வசதியும் செய்யப்பட்டுள்ளது. உகந்தை முருகனாலய சூழலை சுத்தப்படுத்த சிரமதானம்செய்யவிரும்புவோர் எதிர்வரும் 20ஆம் திகதி ஆம் திகதிக்கிடையில் தமது பணிகளை பூர்த்திசெய்துமுடித்துவிட வேண்டும்.

மேலும் பல கருத்துக்கள் பரிமாறப்பட்டு கூட்டம் நிறைவுற்றது.

# அமரர் அ.தங்கத்துரையின் ௨௫ வது நினைவு நாள் இன்று



(எப்.முபாரக் )

திருகோணமலை மாவட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் அமரர். அ.தங்கத்துரை மூவின மக்களாலும் தலையில் தூக்கிவைத்து கொண்டாடப்பட்ட மிகச்சிறந்த மக்கள் தலைவன் என மூதூர் பிரதேச சபை உப தவிசாளர் தெரிவித்துள்ளார். அன்னாரின் 25வது நினைவு தினத்தை முன்னிட்டு வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில், கிளிவெட்டி எனும் கிராமத்தில் இருந்து எந்த அரசியல் பின்னனியும் இல்லாமல் 34 வயது இளைஞனாக பாராளுமன்றம் சென்ற பெருமை தங்கத்துரைக்குத்தான் இருக்கின்றது. அவர் இந்த உலகை விட்டுப் பிரிந்து 25 ஆண்டுகள் ஆனாலும் அவர் மக்களுக்கு ஆற்றிய சேவைகள் இன்னும் அவரை நினைவுபடுத்திக் கொண்டுதான் இருக்கின்றன. 1970 தொடக்கம் 1997 வரையான அரசியல் வாழ்க்கையில் இருமுறை தேர்தல் அரசியலில் அமோக வெற்றி பெற்று பாராளுமன்றம் சென்றிருந்தார் இந்த காலப்பகுதியில் அபிவிருத்தித் திட்டங்கள் உட்பட வேலை வாய்ப்புகள் என பல்வேறு பணிகளை ஒவ்வொரு திணைக்களங்களாக ஏறி இறங்கி நிறைவேற்றியிருந்தார். இதனால் மூவின மக்களும் அவரைதலைதூக்கி வைத்து கொண்டாடினார்கள். அதுமட்டுமல்லாமல் இலங்கை நாடாளுமன்றம், ஆளுமைமிக்க இலங்கை நாடாளுமன்ற பொதுக்கணக்குக் குழுவின் தலைவர் பொறுப்பை அவருக்கு வழங்கி கௌரவித்திருந்தமையையும் நாம் மறந்துவிட முடியாது. எனவே அவருடைய இழப்பு எமது மாவட்ட மக்களுக்கு பேரிழப்பாகும்.

அவர் தனது அரசியல் வாழ்க்கையில் மக்களின் நன்மதிப்பைத் தவிர வேறு எந்த சொத்தையும் சேர்த்திருக்கவில்லை இலங்கையின் இன்றைய இக்கட்டான சூழ்நிலைக்கு இவரைப்போன்ற மக்கள் பிரதிநிதிகள் இல்லாததும் ஒரு காரணம் எனவே இவரைப் போன்றவர்களை எதிர்கால சந்ததியினருக்கு அறிமுகம் செய்து இவரைப்போன்ற திறமையான, தூய்மையான மக்கள் பிரதிநிதிகளை உருவாக்க வேண்டியது அவசியம் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

# இவ் வாரம் சகல பாடசாலைகளும் பூட்டு: கிழக்கு மாகாணத்திலும் பூட்டு

( காரைதீவு நிருபர் சகா)

நாட்டில் நிலவும் சமகால எரிபொருள் தட்டுப்பாடு காரணமாக இவ்வாரம் நாட்டில் உள்ள சகல பாடசாலைகளும் மூடப்படுகிறது.

இத் தீர்மானம் நேற்று கல்வி அமைச்சர் கல்வி செயலாளர் மற்றும் மாகாண கல்விச் செயலாளர்கள் மாகாண கல்விப் பணிப்பாளர்கள் நடாத்திய சூம் கலந்துரையாடி எடுக்கப்பட்டது.

கிழக்கு மாகாண பாடசாலைகள் 3 தினங்கள் இயங்கும் எனக் கூறப்பட்டது.

எனவே இந்த அறிவிப்பு தொடர்பாக கிழக்கு மாகாண கல்விப் பணிப்பாளர் திருமதி நகுலேஸ்வரி புள்ளநாயகத்துடன் தொடர்பு கொண்டு கேட்டபோது கிழக்கிலும் பாடசாலைகள் மூடப்படுகிறது என்றார்.

நடைபெற்ற தேசிய மட்டத்தில் ஜூம் கூட்டத்தால் எடுக்கப்பட்ட முடிவுகள்.

1. அடுத்த வாரம் அனைத்து பள்ளிகளும் மூடப்படும். 2. மாகாணத்தின் ஆன்லைன் வகுப்புகளை நடத்த முடிந்தால் 3. 5,11ச்ண ஞீ13 வகுப்புகளை நடத்துவதற்கு அதிகபட்ச முயற்சியாக இருக்க வேண்டும். BRAIL மற்றும் அ மாணவர்களுக்கு கொழும்பு அமைச்சகத்தால் நடத்தப்படும் அமர்வுகளை நிர்வகிப்பதற்கு ஒரு ஆபரேஷன் கமிட்டி உருவாக்கப்பட வேண்டும்.

5. அமர்வுகள் முதல் ஆசிரியர்களுக்காகவும், பின்னர் மாணவர்களுக்காகவும் செயல்படுத்தப்படலாம். 6. தொலைதூர கல்வி கொழும்பு அமைச்சகத்தால் அதிகபட்சமாக செயல்படுத்தப்படலாம். 7. அமர்வு திட்டங்கள் தயாரிப்பின் கீழ் உள்ளன. 8. ஆகஸ்ட் விடுமுறை சில நாட்களே விடப்படும்.

9. தேவையேற்படின் பள்ளிகள் சனிக்கிழமைகளில் நடாத்தலாம். 10.ஆரம்பநெறிஅமர்வு குறிப்புகள் கூட தயாரித்தல் 11. மாணவர்கள் அமர்வுகள் பல்கலைக்கழகத்திற்கு வரவிருக்கும் மாணவர்களால் நடாத்தப்படலாம். 12. மாகாண ஒழுங்குமுறை மாகாண துறைகளால் செய்யப்பட வேண்டும்.

# கங்கத்தலாவ ஐக்கிய ஊடகவியலாளர் ஒன்றியத்தின் புதிய நிர்வாகிகள்



(எப்.முபாரக்)

திருகோணமலை மாவட்டத்தின் கங்கத்தலாவ ஐக்கிய ஊடகவியலாளர் ஒன்றியத்தின் வருடாந்த பொதுக்கூட்டம் சனிக்கிழமை நிலாவெளி விடுதியில் ஒன்றியத்தின் தலைவர் தலைமையில் இடம்பெற்றது.

இதன் போது 2022/24 ஆம் ஆண்டிற்கான புதிய நிர்வாக உறுப்பினர்கள் நியமிக்கப்பட்டார்கள்.

**ஆலோசகர்:-ஆர்.ஜி.தர்மதாச (பிபிசி)**

**தலைவர்:- அமதோர் அமரஜீவ (லங்காதீப)**

**செயலாளர்:-மனுசங்க காரியவசம் (சிரச தொலைக்காட்சி)**

**பொருளாளர்:-பாருக் முபாரக் (சுயாதீன ஊடகவியலாளர்)**

**உப தலைவர்:- லக்மால் கே. படுகே (சுயாதீன ஊடகவியலாளர்)**

**உப செயலாளர்:-எம்.எச்.யூசுப் (ஐடிஎன்)**

**அமைப்பாளர்:-ஓ.கியாஸ் சாபி (லேக் ஹவுஸ்,தினகரன்)**

**நிர்வாக உறுப்பினர்களாக**

**1).ஏ.ஆர்.எம்.சாஹிர் (தளம் இணையம்)**

**2).துஷார சந்தனா சேனாரத்ன (லங்காதீப)**

# போஷாக்கு உணவு போதிகள் வழங்கி வைப்பு





(தலவாக்கலை பி.கேதீஸ்)

நுவரெலியா மாவட்டத்தில் ஆரம்ப பாடசாலை மாணவர்கள் மத்தியில் காணப்படும் போஷாக்கு குறைபாட்டினை நிவர்த்தி செய்வதன் மூலம் மாணவர்கள் கல்வி கற்கும் ஆற்றலை அதிகரிக்க முடியும் என்ற நோக்கில் சதாநந்தன் திருமுருகன் தலைமையில் இயங்கிவரும் விஷ்ணு ஆரோஹணம் சமூக சேவைகள் மன்றத்தின் ஊடாக பெருந்தோட்டப் பிரதேசங்களிலுள்ள பாடசாலைகளில் கல்வி பயிலும் மாணவர்களுக்காக போஷாக்கு செயற்திட்டமொன்று நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

அதன் முதல் கட்டமாக கொட்டகலை பிட்டவின் பாடசாலையில் தேர்ந்தெடுக்கப்பட்ட 5 தொடக்கம் 10 வயது வரையான சுமார் 60 மாணவர்களுக்கும், லிந்துலை டீ மலை தோட்டத்தைச் சேர்ந்த 50 பாடசாலை மாணவர்களுக்கும், வலஹா பகுதியை சேர்ந்த 60 மாணவர்களுக்கும் போஷாக்குப் பொதிகள் வழங்கி வைக்கப்பட்டன.



# முத்துக் குளித்த நாடு பிச்சைக்கார நாடாக மாற்றிவிட்டார்கள்

## ஆயர் மேதகு யஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகை

**( வாஸ் கூஞ்ஞ)**

இந்த நாட்டில் 74 வருடங்கள் ஆட்சி செய்தவர்கள் பிரமாணிக்கம் அற்றவர்களாக வாழ்ந்தமையால் முத்துக் குளிக்கும் நாடாக இருந்த நாட்டை பிச்சைக்கார நாடாக ஆக்கிவிட்டார்கள். மரியாளைப்போல் பிரமாணிக்கத்துடன் வாழ வேண்டும் அடுத்து அவளைப்போல் மற்றவர்களுக்கு உதவி செய்தல் வேண்டும். பகிர்ந்து வாழ்வதும் நன்மை செய்வதுமே எமது வாழ்வாகும் என யாழ் மறைமாவட்ட ஆயர் மேதகு யஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகை இவ்வாறு தெரிவித்தார்.

மன்னார் மறைமாவட்டத்தில் சனிக்கிழமை (02.07.2022) மடு அன்னையின் ஆடி பெருவிழா கொண்டாடப்பட்டபோது இவ் பெருவிழா கூட்டுத்திரப்பலியில் பங்கு கொண்டு இங்கு மறையுரை ஆற்றுகையில் யாழ் மறைமாவட்ட ஆயர் மேதகு யஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகை தொடந்து தெரிவிக்கையில்பகிர்ந்து வாழ்வதிலும் நன்மை செய்வதிலும் கருத்தாய் இருங்கள். பல்வேறு துன்பங்கள் துயரங்கள் தாகங்கள் எல்லாம் தாங்கியவர்களாக நாம் மடு அன்னையை நோக்கி வந்திருக்கின்றோம்.

கடந்த 74 ஆண்டுகளாக இந்த நாட்டை ஆண்டவர்கள் இந்த நாட்டை சுரண்டி இப்பொழுது ஒரு பிச்சைக்கார நாடாக ஆக்கி வைத்துனள்ளனர்.

இந்திய ஓசனிலே முத்துக்குளிக்கும் ஓசனாக இருந்த நாடு இன்று பிச்சைக் கேட்டு நிற்கின்றது என்றால் இந்த 74 வருடங்களாக இந்த நாட்டை சுரண்டி யாவற்றையும் எடுத்துச் சென்றுள்ளனர்.

மக்களை ஒரு சாதாரண மனிதர்களாக இவர்கள் எண்ணினார்கள் ஆனால் இந்த மக்கள் இந்த நாட்டின் பிரடிஜைகள் என இவர்கள் ஒரு போதும் சிந்தித்தது கிடையாது

இவர்களின் சுயநலம்தான் இந்த நாட்டின் அழிவுக்கு காரணமாகும். இந்த கவலைகளுடன் எதிர்காலம் எப்படி இருக்க போகின்றது எமது எதிர்கால பிள்ளைகளின் நிலை எவ்வாறு இருக்கப் போகின்றது என்ற ஏக்கத்துடன் பலர் இவ் மடு அன்னையை நோக்கி வர விருப்பம் இருந்தும் பொருளாதார நெருக்கடியால் வர முடியாத நிலையில் இருக்கின்றனர்.

ஆனால் நீங்கள் ஏன் இங்கு வந்திருக்கின்றீர்கள் என்றால் மரியன்னை எமக்காக பரிந்து பேசி எமக்கு வேண்டியதை பெற்றுத் தருவாள் என்ற நம்பிக்கையே தனது இறை மகனிடம் வேண்டி நமக்கு செய்வாள் என்ற ஒரே நம்பிக்கையே ஆகும்.

கானாவூர் திருமண வீட்டில் கண்ட குறையை நோக்கி தனது திருமகனிடம் சென்று பரிந்து பேசுகின்றாள் மரியன்னை. தனது நேரம் வரவில்லை என கூறிய இறைமகன் தாயின் வேண்டுகோளை நிறைவேற்றி வைக்கின்றார்.



இந்த விசுவாசம்தான் எம்மை இங்கு அழைத்து நிற்கின்றது. இயற்கை ஒன்றும் செய்ய முடியாத நிலையிலும் நாம் இந்த விசுவாசத்துடன் மரியன்னையிடம் கையேந்துவோம்.

மரியன்னையிடம் நாம் காண்பது முதலாவது பிரமாணிக்கம். 'ஆகட்டும்' என கூறிய மரியன்னை இறுதி வரை அவள் பிரமாணிக்கமாகவே இருந்தாள்.

கணவர் புரிந்து கொள்ளவில்லை இடப்பெயர்வு இவற்றையெல்லாம் கடந்து தனது ஒரே மகனை சிலுவை அடியில் நின்று எமக்காக அவரை ஒப்புக் கொடுத்தவள் மரியாள்.

இன்று பிரமாணிக்கம் எம்மிலிருந்து அற்று போகின்றது. இவைகள் தொழிலாக இருக்கலாம் குடும்ப வாழ்வாக இருக்கலாம் ஏன் இன்று துறவற வாழ்க்கையிலும் பிரமாணிக்கம் அற்று போகின்றது.

ஏனென்றால் நாம் இன்று யாவற்றுக்கும் காரணம் சொல்ல துணிந்து விட்டோம். முன்பு கணவன் மனைவியாக நீண்ட காலம் வாழ்ந்தார்கள். அனால் இன்று திருமணம் முடித்து ஒரு சில மாதங்கள் வருடங்களுக்குள் விவாகரத்து செய்ய துணிந்து விடுகின்றனர்.

இன்பத்ணீலும் துன்பத்திலும் நாம் பிரமாணிக்கமாக இருப்பேன் என கூறிய தம்பதினர் சுயநலம் காரணமாக மிகவும் குறுகிய காலத்தக்குள் பிரிந்து விடுகின்றனர். காரணம் பிரமாணிக்கம் அற்று போய் விடுகின்றது. இவர்கள் நான் என்ற வட்டத்துக்குள் மூழ்கி நாங்கள் என்பதை மறந்து விடுகின்றனர்.

ஆசிரியர் பாடசாலையில் தனது வகுப்பில் படிப்பிக்க மாட்டார் ஆனால் தனது தனியார் வகுப்பில் இவர் ஒரு சிறந்த ஆசிரியர் என பெயர் ஓங்குகின்றது இவரிடம் இருந்த பிரமாணிக்கம் எங்கே?

துறவற வாழ்க்கையிலும் இவ்வாறே. காரணம்; நாங்கள் அதிகம் படித்து விட்டோம் என்ற பெருமையில் கீழ்படிதல் என்பது ஒரு துள்ளிக்கூட இல்லாது இவர்களிடம் போகின்றது. ஆனால் மரியாளோ இறுதிவரை பிரமாணிக்கமாக காணப்பட்டாள்

நாமும் மரியாளைப்போல் பிரமாணிக்கத்துடன் வாழ வேண்டும் அடுத்து அவளைப் போல் மற்றவர்களுக்கு உதவி செய்தல் வேண்டும். பகிர்ந்து வாழ்வதும் நன்மை செய்வதுமே கிறிஸ்தவ வாழ்வாகும்.

நன்மை செய்ய விருப்பம் இல்லையேல் தீமை செய்யாதே ஆனால் எம்மிடம் இவை இல்லையே. ஏமக்கு என வைத்திருப்தை மற்றவர்களுக்கு கொடுப்பதே உண்மையான ஈகை ஆகும்.

இறைவன் எம்மிடம் இறுதி நேரத்தில் கேட்பது நீ சின்னஞ் சிறுவர்களுக்கு என்ன செய்தாய் என்பதாகும். இந்த உலகம் உருண்டு போவது வல்லர்களால் அல்ல ஆனால் இந்த உலகத்தில் ஓரிரு நல்லவர்கள் இருப்தாலே ஆகும்.

இந்த நாட்டில் 74 வருடங்கள் வல்லவர்கள் இருந்தார்கள் ஆனால் இன்று என்ன நடக்கின்றது. தேர்தல் வரும் வல்லவர்களாக மாறுவர் ஆனால் நன்மை செய்ய மாட்டார்கள். சுரண்டி வாழந்து பிச்சைக்காரர்களாக ஆக்கிவிட்டனர்.

ஆகவே நாம் பகிர்ந்து வாழவதும் நன்மை செய்வதுமே எமது வாழ்வின் அடித்தளமாக அமைய நாம் மரியன்னையிடம் வேண்டுவோம் என இவ்வாறு தெரிவித்தார்.

# வீதிக்கு இறங்கிய ஆட்டோ ஓட்டுனர்கள் அதிகாரிகளுக்கும் மகஜர் கையளிப்பு







**(நூருள் ஹுதா உமர் )**

போதியளவு எரிபொருள் வழங்க வேண்டும் என்றும் எரிபொருளினை முன்னுரிமை அடிப்படையில் பெற்றுக் கொள்வதற்கான கோரிக்கையை முன்வைத்தும் ஐக்கிய முச்சக்கரவண்டி உரிமையாளர்கள் கூட்டுறவுச் சங்க அங்கத்தவர்கள் மாளிகா சந்தியில் பதாதைகளை ஏந்திக்கொண்டு ஆர்ப்பாட்டம் ஒன்றை நேற்று (04) முன்னெடுத்தனர்.

இதன்போது ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த ஆர்ப்பாட்டக்காரர்கள்; நாங்கள் கடந்த பத்து வருடங்களுக்கு மேலாக முச்சக்கர வண்டி ஒட்டுநர்களாக தொழில் புரிந்து வருகிறோம் . தற்போது எமது நாட்டில் ஏற்பட்டுள்ள எரிபொருள் ( பெட்ரோல் ) தட்டுப்பாடு காரணமாக எங்களது நாளாந்த வாழ்வாதாரத்தை மேற்கொள்ள வருமானமும் கேள்விக்குறியாகி உள்ளது . எங்களது குடும்பங்கள் முச்சக்கர வண்டி முடியாதுள்ளதுடன் அன்றாட தொழிலையே நம்பி வாழ்க்கைச் செலவை கொண்டு செல்கின்றார்கள் .

மேற்படி பெட்ரோல் தட்டுப்பாடு காரணமாக எங்கள் தொழிலை தொடர்ச்சியாக செய்ய முடியாது உள்ளத்துடன் பெரும் சிரமத்திற்குள்ளாகி காணப்படுகின்றன . மேலும் எரிபொருள் நிரப்பு நிலையங்களில் மிக நீண்ட வரிசைகளில் நின்ற போதிலும் சிலவேளைகளில் எரிபொருள் கிடைப்பதும் இல்லை . மிகவும் கஷ்டமான சூழ்நிலையில் வாழ்ந்து வருகின்றோம் . எனவே இவற்றை கருத்தில் கொண்டு எங்களுக்கு எரிபொருளை பெற்றுக் கொள்ள பொருத்தமான முறை ஒன்றினை செய்து தருமாறும் சம்பந்தப்பட்டவர்களை கேட்டுக்கொள்கிறோம் என்றனர்.

எரிபொருள் நிரப்பு நிலைய முன்றலில் இருந்து ஆரம்பித்து பேரணியாக சென்ற ஆர்ப்பாட்டக்காரர்கள் சாய்ந்தமருது பிரதேச செயலாளர் எம்.எம். ஆஷிக் மற்றும் சாய்ந்தமருது பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி எம்.ஐ.எம். சம்சுதீன் ஆகியோரை சந்தித்து மகஜர் ஒன்றையும் கையளித்தனர். இது தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்படும் என ஆர்பாட்டகாரர்களுக்கு அதிகாரிகள் உறுதியளித்தனர்.

# கல்வி நேர்மையான சமுதாயத்தை உருவாக்க வேண்டும்

## கல்முனை வடக்கு பிரதேச செயலாளர் அதிசயராஜ்

## கல்முனை பற்றிமாவில் உஉஉ புலமையாளர் கௌரவிப்பு

















**( காரைதீவு நிருபர் சகா)**

கல்வி நேர்மையான சமுதாயத்தை உருவாக்க வேண்டும்.

இவ்வாறு கல்முனை வடக்கு பிரதேச செயலாளர் ரி.ஜே.அதிசயராஜ் தெரிவித்தார்.

கிழக்கு மாகாணத்தில் புகழ் பெற்ற கல்முனை கார்மேல் பற்றிமா தேசிய கல்லூரியில் புலமையாளர் கௌரவிப்பு விழா கடந்த சனிக்கிழமை அதிபர் அருட் சகோதரர் சந்தியாகு தலைமையில் நடைபெற்றபோது அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்..

கடந்த ஆண்டு நடைபெற்ற தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் கல்லூரி சார்பில் சித்தி பெற்ற 222 மாணவர்களுக்கு பாராட்டும் கௌரவமும் வழங்கப்பட்டது .

பிரதம அதிதியாக கல்முனை வடக்கு பிரதேச செயலாளர் ரி.ஜே.அதிசயராஜ் கலந்து சிறப்பித்தார்.

கௌரவ அதிதியாக கல்முனை வலய பிரதி கல்வி பணிப்பாளர் திருமதி வரணியா சாந்த ரூபன் சிறப்பு அதிதிகளாக கல்முனை தமிழ் பிரிவு கோட்டக் கல்வி பணிப்பாளர் எஸ். சரவணமுத்து சம்மாந்துறை வலய உதவி கல்வி பணிப்பாளர் வி.ரி சகாதேவராஜா கல்முனை வலய ஆசிரிய ஆலோசகர் கே சாந்தகுமார் ஆகியோர் கலந்து கொண்டு இந்த கௌரவங்களை வழங்கி வைத்தார்கள்.

அங்கு அவர் மேலும் உரையாற்றுகையில்.

மாணவர்கள் வெறும் புத்தகப் படிப்பை மாத்திரம் நம்பியிருக்கக்கூடாது.

நல்ல விழுமிய. பண்புகளை வளர்த்து கொள்வதோடு ஏனைய திறன்களை வளர்த்துக் கொள்ள வேண்டும்.

இன்று எத்துறையை எடுத்தாலும் நேர்மையற்ற போக்கினை காண்கிறோம். பெற்றோலுக்கான வரிசையில் கூட நேர்மையீனம். சுயநலமற்ற பண்புகள் உருவாக வேண்டும். என்றார்.

உதவி கல்வி பணிப்பாளர் வி.ரி.சகாதேவராஜா

விஷேட அதிதி உரையாற்றினார்.

கடந்த ஆண்டு பரீட்சையில் 190 புள்ளிகளைப் பெற்று சாதனை புரிந்த செல்வன் தவராசா ஹேஷானந்த் உள்ளிட்ட 222 புலமையாளர்கள் நினைவுச் சின்னங்கள் வழங்கி பாராட்டப்பட்டனர்.

கலந்து கொண்ட அதிதிகளுக்கும் அதிபரால் கௌரவம் வழங்கப்பட்டது.

# மீராவோடை மேற்கு, கிழக்கில் பாரிய சிரமதானப்பணி: ஒரே நேரத்தில் பல இடங்களில் துப்பரவுப்பணி





**(எஸ்.எஸ்.அமிர்தகழியான்)**

கோறளைப்பற்று மேற்கு, ஓட்டமாவடி பிரதேச செயலகப் பிரிவிற்குட்பட்ட மீராவோடை மேற்கு மற்றும் கிழக்கு கிராம உத்தியோகத்தர் பிரிவில் இன்று 2022.07.03ம் திகதி ஞாயிற்றுக்கிழமை பாரிய சிரமதானப்பணி முன்னெடுக்கப்பட்டது.

இதன் போது, அல்-ஹிதாயா மகா வித்தியாலயம் (தேசிய பாடசாலை), உதுமான் வித்தியாலயம், அமீர் அலி வித்தியாலயம், கிராமிய வைத்தியசாலை மற்றும் பிரதான வடிகால் ஓரங்கள் சிரமதானம் மூலம் துப்பரவு செய்யப்பட்டது.

இச்சிரமதானப்பணி கிராமிய சமுர்த்தி சமுதாய அடிப்படை அமைப்புக்களின் அங்கத்தவர்களால் ஒரே நேரத்தில் மேற்குறித்த சகல இடங்களிலும் திட்டமிட்ட அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டது.

இதனைச்சிறப்பாக ஏற்பாடு செய்த பிரிவு சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் எஸ்.காண்டீபன் மற்றும் சமுர்த்தி சமுதாய அடிப்படை அமைப்புக்களின் தலைவர்கள், அங்கத்தவர்களுக்கு பிரதேச செயலகம் சார்பாகக் கலந்து கொண்ட சமுர்த்தி சமூக அபிவிருத்தி உதவியாளர் எம்.என்.எம்.சாஜஹான் நன்றி தெரிவித்ததுடன், அல்-ஹிதாயா மகா வித்தியாலய (தேசிய பாடசாலை) முதல்வர் கே.எல்.சபாஹிர் அவர்களும் நன்றி, பாராட்டுக்களைத் தெரிவித்தார்.

# எரிபொருள் தட்டுப்பாட்டில் எரிந்துபோன மனிதாபிமானம்!

**நூருல் ஹுதா உமர்**

சுதந்திர இலங்கை வரலாற்றில் என்றுமில்லாத வரிசைகள் எரிபொருளை பெற நாட்டின் எல்லா பாகங்களிலும் காத்து நிற்கிறது. படித்தவன், பாமரன், முக்கியஸ்தர் எனப்பலரும் வரிசையில் சமனாக நிற்கிறார்கள். ஒரே தண்ணீர் போத்தலை மாறி மாறி பருகிக்கொண்டும், ஒரே பிஸ்கட் பக்கட்டை பகிர்ந்து சாப்பிட்டுக்கொண்டும் இலங்கை அரசியல் முதல் சர்வதேச விடயங்களை ஆராய்ந்து கொண்டும் பொழுதை கழிக்கிறார்கள். ஆனாலும் இதனை கூர்ந்து கவனித்தால் ஒரு ஆச்சரியம் இருக்கிறது. நிறைந்த பணக்காரனின், உயர்ந்த செல்வந்தனின், முக்கிய அரசியல்வாதிகளின், அரசியல் கட்சிகளின் முக்கியஸ்தர்களின் வாகனங்களை எரிபொருள் பெற காத்திருப்போர் வரிசையில் காணவில்லை. உயர்ரக வாகனங்கள் போலினில் காணவில்லை. மண்ணெண்ணெய்க்காக பல மணிநேரம் நிறைமாத கற்பினிகள் கூட போலினில் நிற்கிறார்கள். அங்கவீனர்கள், முதியோர்கள் ஏன் பாடசாலை சிறுவர்கள் கூட போலினில் தவிக்கிறார்கள். இந்த வரிசைகளில் அநேக இடங்களில் மனிதாபிமானம் இறந்து போனதும், சில இடங்களில் மனிதத்தன்மை வெளிப்பட்டதும் காலம் காட்டிய கோலமாக மலர்ந்திருக்கிறது. சமூக வலைத்தளங்களில் பாலகர்களின் நிலைகள் நெஞ்சுருக வைக்கும் அளவுக்கு பரிதாபமாக இருக்கிறது. வரிசையில் காத்திருந்த பல உயிர்கள் ஆண்டவன் காலடியை சென்றடைந்தும் இருக்கிறது.





நீண்டவரிசையில் காத்திருந்தும் இப்போதைய நாட்களில் இடைநடுவில் எரிபொருள் இல்லாமல் கலைகிறது. ஆனாலும் சில இடங்களில் நள்ளிரவில் வெளியிடங்களுக்கு கலன்களில் அடைக்கப்பட்டு கடத்தப்படும் எரிபொருளை கடந்துதான் ஒவ்வொருநாளும் விடிகிறது என்றால் சிலர் கோபிக்கலாம். ஆனால் பெரும்பாலும் உண்மை அதுதான். மனசாட்சியை அடகுவைத்து வைத்து தலைக்கேறிய மமதையுடன் சில செட்காரர்கள் (எரிபொருள் நிரப்பு நிலைய உரிமையாளர்கள்) நடந்து கொள்கிறார்கள் எனும் குற்றசாட்டு இன்றைய நாட்களில் மலிந்து காணப்படுகிறது. இருந்தாலும் பல எரிபொருள் நிரப்பு நிலைய உரிமையாளர்கள் இறைவனுக்கும், மனச்சாட்சிக்கும் பயந்து நடந்து கொள்வதும் இல்லாமல் இல்லை. எரிபொருளை பதுக்கும் வாடிக்கையாளனும் பதுக்கும் விற்பனையாளனும் மரணித்தால் அதன் பயனை தனது மரணக்குழி வரை கொண்டுசெல்ல முடியாது என்பதை மறந்தே விட்டார்கள்.

நிறைந்த பணத்துக்கு குறைந்த எரிபொருளை பொதுமக்கள் பெறவேண்டிய நிலையில் எரிபொருளுக்காக மக்கள் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்கி வரும் சூழ்நிலையில் கிழக்கு மாகாணத்தில் இருந்து மேல்மாகாணம் அடங்களாக பல்வேறு மாகாணங்களையும் நோக்கி இரவு நேரங்களில் சொகுசு வாகனங்களிலிலும், பொதுமக்கள் பயணிக்கும் பஸ்வண்டிகளிலும் பெற்றோல், டீசல் உட்பட பல்வேறு வகையான எரிபொருட்கள் கலன்களில் அடைந்து செல்கிறதாக முக்கிய பிரமுகர் ஒருவர் தனது அனுபவத்தை அண்மையில் என்னிடம் பகிர்ந்துகொண்டார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில் கலன்களில் அடைக்கப்பட்ட எரிபொருள் மட்டுமின்றி நிரப்பப்பட்ட சமையல் எரிவாயுக்களும் நான் பயணித்த பொதுமக்கள் பயன்பாட்டு வாகனத்தின் இருக்கைகளுக்கு கீழ் அமைக்கப்பட்டுள்ள களஞ்சிய பகுதியில் வைத்து கொழும்புக்கு எடுத்துவரப்பட்டது. பயண முடிவில் என்னுடைய பயணப்பொதிகளை எடுக்கும் போதே அதை அறிந்து மிகவும் பயந்தேன் என்றார்.

சொந்த வாகனத்தில் செல்ல எரிபொருள் தட்டுப்பாடு இருந்த காரணத்தினால் நான் ஊரிலிருந்து தலைநகருக்கு பயணித்த சொகுசு பேருந்தில் எரிபொருள் நிரப்பப்பட்ட கலன்கள் 20-25ம், சமையல் எரிவாயு 20-30 உம் இருந்ததை பயண முடிவில் என்னுடைய பயணப்பொதிகளை எடுக்கும் போது கண்டேன். பஸ்ஸில் குளிரூட்டி முழுமையாக அன்றிரவு முழுவதும் தொழிற்பட்டுக்கொண்டிருந்தது. அமுக்கம் அல்லது சூடாகி இவை தீப்பற்றியிருந்தால் அல்லது விபத்தொன்று நடந்து பஸ் தீப்பிடித்திருந்தால் நிலைமை எப்படி இருந்திருக்கும் என்பதை கற்பனை கூட பண்ணிப்பார்க்க முடியாதளவில் கொடூரமாக இருந்திருக்கும் என அரசாங்கத்தில் பொறுப்பு வாய்ந்த பதவியொன்றில் இருக்கும் உயரதிகாரி என்னிடம் தெரிவித்தார்.

இப்படி கருப்புச்சந்தையில் டீசல் 800-1000 வரையும் பெற்றோல் 650-1000 ரூபாய்க்கும் மண்ணெண்ணை 200- 250 ரூபாய்க்கும், சமையல் எரிவாயு 25000 ரூபாய் வரையும் கருப்பு சந்தையில் வியாபாரம் நடப்பதாக அறிய முடிகிறது. ஊருக்கு வரும் எரிபொருள் எல்லாம் கொழும்புக்கும், கண்டிக்கும் இரவு பஸ்ஸில் ட்ரிப் போகுது, தட்டிகேட்கவேண்டியவர்கள் குளிர்ந்த அறையில் கூலாக அமர்ந்து வேடிக்கை பார்க்கிறார்கள். சில இடங்களில் நண்பர்கள், முக்கியஸ்தர்களுக்காக பாதுகாப்பு வேலிகள் கூட செட்டை பதம் பார்க்கிறது என பொதுமக்கள் பலரும் ஆதங்கப்படும் நிலை நாடுமுழுவதிலும் இருக்கிறது. சில முக்கிய அதிகாரிகள் தனது அதிகாரத்தை பயன்படுத்தி மொத்தமாக எரிபொருளை கொள்வனவு செய்து கருப்பு சந்தையில் அதிக விலைக்கு விற்கிறார்கள் என்றால் நாம் நம்பித்தான் ஆகவேண்டியிருக்கிறது. அப்படி காலம் கெட்டுபோகி இருக்கிறது.





வரிசையில் பல நாட்களாக, பல மணித்தியாலங்களாக காத்திருந்து இறுதிநேரத்தில் எரிபொருள் கிடைக்காத பொதுமகன், நீங்கள் செய்வது உங்களுக்கே சரியாக தெரிகிறதா? பெற்றோல் முடிந்துவிட்டது என சொல்லி செட்டை மூடினீர்கள். இன்று காலையில் புதிய விலையில் பல நிரப்பு நிலையங்கள் காலையில் எரிபொருளை வழங்குகிறது. விலை கூட்டியதோ இன்று காலை 3 மணிக்கு. அப்போ உங்களுக்கு புது விலையில் பௌசர் எப்போ வந்திச்சு? இந்த நாட்டில் மக்கள் படும் துன்பத்துக்கு அரசியல்வாதிகள் எவ்வளவு காரணமோ அதே பங்கு இந்த முதலாளிகளுக்கும் உண்டு. சாதாரணமாக கிடைக்கும் லாபத்திற்கு மேலதிகமாக நீங்க பெற்றோலுக்கு லீற்றர் ஒன்றிற்கு 82 ரூபாவும், டீசலுக்கு லீற்றர் ஒன்றிற்கு 111 ரூபா அளவிலும் விலை மாற்றத்தால் மட்டும் கொள்ளை இலாபம் உழைக்குறீங்க. அரசியல்வாதிகள் மீது மக்களுக்கு இருக்கும் கோவம் உங்களை நோக்கி திரும்பினால் என்னவாகும் என யோசித்து பாருங்க. இது பெற்றோல் செட் முதலாளிகளுக்கு மட்டுமல்ல, எல்லா முதலாளிகளுக்கும் தான். நீங்களும் இந்த சமுதாயத்தில் தான் வாழ்கின்றீர்கள். உங்கள் பிள்ளைகளுக்கு பாவச்சொத்தை சேர்த்து வைத்துவிட்டு போகாதீங்க. யுத்த காலத்தில் கூட எம்மக்கள் பரஸ்பரம் தங்களிடமிருந்ததை பகிர்ந்து ஒருவொருக்கொருவர் உதவியாக வாழ்ந்தார்கள் எனும் ஆதங்கத்தை கொட்டிய பொதுமகனின் ஆதங்கத்தில் ஆயிரம் அர்த்தங்கள் புதைந்துள்ளது.

இன்று உலகம் சுற்றுவது எரிபொருளில் என்றாகிவிட்டது. எரிபொருள் விலை கூடினால் எல்லாவற்றின் விலையும் கூடுகிறது. எரிபொருள் கிடைக்காமல் விட்டால் எல்லாமே ஓய்வாகிவிடுகிறது என்பதே இன்றைய காலத்தில் இயற்கையின் நியதியாகி இருக்கிறது. இவற்றை தீர்க்கும் நோக்கில் நாம் என்னதான் திட்டம் தீட்டினாலும் அது தோல்வியடைகிறது. இப்போது நாட்டில் பெற்றோல், டீசல் இல்லை என்றாகிவிட்டது. காணும் இடம் எல்லாம் வாகனங்களின் அணிவரிசை. செட் ஓனர்களுக்கு கூட எப்போது பெற்றோல் கிடைக்கும் என்பது தெரியாத நிலை.



ஏன், பெற்றோலிய துறை அமைச்சருக்கு கூட தெரியாது. இவ்வாறான இக்கட்டான நிலையில் பயோ டீசல் (BIO DIESEL) பற்றிய உரையாடல்கள், தேடல்கள் சூடு பிடிக்க தொடங்கி இருக்கின்றன.

நிறைய வளர்ச்சி அடைந்த நாடுகளில், இந்தியாவில் கூட இப்போது பெற்றோல் டீசலுக்கு மாற்றீடாக பயோ டீசல் பாவிக்கப்பட்டு வருகிறது. இதன் ஆரம்ப உற்பத்தி செலவு கொஞ்சம் அதிகம் என்பதால் இந்த தொழிற்துறை அவ்வளவு பிரபல்யம் அடையவில்லை. ஆனால் நமது நாடு இருக்கும் இக்கட்டான நிலையில் இந்த மாற்றீடு சில வேளை நல்ல தெரிவாக இருக்கும். பெரிய ஹோட்டல்களில், உணவகங்களில் ஏராளமான சமையல் எண்ணெய் வீணாகும். ஒரு முறை பாவித்த எண்ணையை, மீண்டும் ஒரு முறை அவர்கள் பாவிக்க மாட்டார்கள். கொட்டிவிடுவார்கள். ஆனால், நமது நாடுகளில் இவ்வாறு உபயோகிக்கப்பட்ட சமையல் எண்ணெய்யை, சிறு ஹோட்டல்காரர்கள், சாலையோர கடைக்கரர்கள் குறைந்த விலைக்கு வாங்கிச் சென்று பயன்படுத்துகிறார்கள். கொத்து போட, பறாட்டா மாபிசைய பாவிக்கிறார்கள். பலமுறை ஒரே சமையல் எண்ணெய்யை மீண்டும் மீண்டும் பயன்படுத்துவது உடல் நலத்துக்கு மிகவும் கேடு என்று சொன்னாலும் யாரும் கேட்பார் இல்லை.

அமெரிக்கா போன்ற வளர்ந்த நாடுகளில், உணவகங்கள் பயன்படுத்திய சமையல் எண்ணெயை மொத்தமாக சேகரித்து எடுத்துப்போய் பயோ டீசல் செய்கிறார்கள். வடிகட்டி சுத்திகரித்து 10:1 எனும் விகிதத்தில் மெதனாலுடன் கொஞ்சம் சோடியம் ஹைட்ரொக்ஸைடை கலந்து புராசஸ் செய்கிறார்கள். காய்ச்சி எடுக்கிறார்கள். கிட்டத்தட்ட 100 லிட்டர் பாவித்த சமையல் எண்ணெயிலிருந்து 100 லிட்டர் பயோடீசலும், 10 லிட்டர் க்ளிசராலும்/கிளிசரீன் எடுக்கிறார்கள். க்ளிசாராலை மருந்து உற்பத்தி நிறுவனங்களுக்கும், பயோடீசலை வாகனங்களுக்கும் விற்பனை செய்கிறார்கள். இப்படி அமெரிக்காவில் மட்டும் ஒரு நாளைக்கு 64000 பெரல் பயோடீசல் தயாரிக்கிறார்கள். ஜேர்மனியில் 55000. நமது அண்டை நாடான இந்தியாவில் கூட 2000 பெரல்கள். முழு இந்தியாவிலும் உணவகங்களில் பாவிக்கப்படும் எண்ணெய்யை எடுத்தால் ஆண்டுக்கு 100 கோடி லிட்டர் பயோடீசல் கிடைக்குமாம் என்பது தகவல் என வைத்தியரொருவர் தெரிவித்த விடயத்தை இங்கு அடிக்கோடிட்டு காட்டுகிறேன்.

நமது நாட்டிலும் தற்போது இந்த பயோ டீசல் பேசுபொருளாகி உள்ளது. அநுராதபுரத்தை சேர்ந்த வைத்தியர் ஒருவர், தற்போது ஒரு வருட காலமாக காட்டு ஆமணக்கு விதைகளில் இருந்து பெறப்பட்ட பயோடீசலை பாவிக்கிறார் என்ற செய்தி அண்மையில் பிரபல்யம் அடைந்திருந்தது. அது போல இன்னும் சிலரின் பயோ டீசல் உற்பத்தி முயற்சிகளும் தற்போது ஊடக வெளிச்சத்திற்கு வந்திருந்தன. நமது நாட்டில், நமது பகுதிகளில் இப்படியான முயற்சிகளை ஆர்வமுள்ளவர்கள் ஆரம்பிக்க முடியும்.

இதன் மூலம் ஹோட்டல்களில், வீடுகளில் பாவித்த சமையல் எண்ணெய்யை மீண்டும் மீண்டும் உபயோகப்படுத்துவதை தடுக்க முடியும். அதன் மூலம் நிறைய மாரடைப்புக்களை பாரிசவாதங்களை, புற்றுநோயை, கொலஸ்ட்ரோலை சமூகத்திலிருந்து அகற்ற முடியும். தற்போது நாட்டில் நிலவும் பெற்றோல் டீசல் தட்டுப்பாட்டை இந்த பயோ டீசல் மூலம் ஓரளவாவது நிவர்த்திக்க முடியும். நல்ல வருமானம் கிடைக்கும். சூழல் பாதுகாப்பு. பெற்றோல் டீசல் போல இந்த பயோ டீசலில் சுற்றுச் சூழல் பாதிப்பு இல்லை என்பதால் சிறந்த மாற்றீடு என்று அவர் மேலும் தெரிவித்திருந்தார்.

எரிபொருள் நெருக்கடிக்கு பிரதான காரணம் பிரதமரின் பயமுறுத்தும் முன்னறிவிப்புக்களும்,

# எரிபொருள் தட்டுப்பாட்டில் எரிந்துபோன மனிதாபிமானம்!



குறித்த அமைச்சுக்கான அமைச்சரின் கருத்துக்களும் பொறுப்பற்ற விதத்தில் இடம்பெறும் பதுக்கல்களுமே. எரிவாயு விநியோகம் மற்றும் இறக்குமதி தொடர்பில் ஜனாதிபதி மாளிகையில் இடம்பெற்ற விசேட கலந்துரையாடலின் போது பதுக்கி வைப்பவர்களுக்கு எதிராக சட்டத்தை கடுமையாக அமுல்படுத்த ஜனாதிபதி அறிவுறுத்தியிருந்தார். நாட்டுக்கு தற்போது கிடைத்துள்ள மற்றும் அடுத்த சில நாட்களுக்குள் பெறப்படவுள்ள எரிபொருள் கையிருப்புக்களை நாடளாவிய ரீதியில் உள்ள எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கு முறையாக விநியோகிக்குமாறு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அதன்போது பணிப்புரை விடுத்திருந்தார். அது மட்டுமின்றி நிதி அமைச்சும் மத்திய வங்கியும் அரச மற்றும் தனியார் வங்கிகளுடன் இணைந்து போதியளவு எரிபொருளை பெற்றுக்கொள்வதற்கு வசதியாக கடன் கடிதங்களை வழங்குவதற்கான திட்டங்களை வகுக்க வேண்டும் என்றும் ஜனாதிபதி இதன்போது தெரிவித்தார். இதன்போதுதான் வழங்குனர்களுடனான நீண்ட கால எரிபொருள் விநியோக ஒப்பந்தங்களில் ஈடுபடுவதற்கான சாத்தியம் குறித்து சிறப்புக் கவனம் செலுத்தப்பட்டது.

எரிபொருள் விநியோகத்தில் பொதுப் போக்குவரத்துக்கு முன்னுரிமை அளிக்கப்படுகிறது. இலங்கை போக்குவரத்து சபைக்கு சொந்தமான எரிபொருள் நிரப்பு நிலையங்களைப் பயன்படுத்தி, தனியார் மற்றும் சுற்றுலா பேரூந்துகள் மற்றும் பாடசாலை வாகனங்களுக்கு பொலிஸாரின் மேற்பார்வையின் கீழ் எரிபொருளை விநியோகிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என ஜனாதிபதி தெரிவித்தார். ஆனால் இவைகளெல்லாம் முறையாக நடந்ததா என்ற கேள்வி எம்மிடம் இருக்கிறது.

ஏனைய அத்தியாவசிய சேவைகளுக்காக அடையாளம் காணப்பட்ட எரிபொருள் நிரப்பு நிலையங்களின் மூலம் தொடர்ந்தும் எரிபொருளை விநியோகிக்கவும், இராணுவம் மற்றும் பொலிஸ் விசேட அதிரடிப்படையினரால் எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கு பாதுகாப்பை வழங்கவும் அரசினால் தீர்மானிக்கப்பட்டது.

தேவையில்லாமல் எரிபொருளை பதுக்கி வைப்பவர்களுக்கு எதிராக சட்டத்தை கடுமையாக அமல்படுத்தவும் பாதுகாப்பு படையினருக்கு உத்தரவிடப்பட்டது. தற்போதுள்ள எரிவாயு கையிருப்புக்களை முறையாக விநியோகிப்பதற்கும் போதுமான எரிவாயு கொள்ளளவை முன்கூட்டியே பெற்றுக்கொள்வதற்கு தேவையான ஏற்பாடுகளை செய்வது குறித்தும் மின்வலு மற்றும் எரிசக்தி அமைச்சர் கஞ்சன விஜேசேகர, பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ், மத்திய வங்கியின் ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்க, ஜனாதிபதியின் செயலாளர் காமினி செனரத், ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானி அனுர திஸாநாயக்க, நிதியமைச்சின் செயலாளர் மஹிந்த சிறிவர்தன, மின்சாரம் மற்றும் எரிசக்தி அமைச்சின் செயலாளர் மாபா பத்திரன, பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் எஸ். ஹெட்டியாராச்சி, பொலிஸ் மா அதிபர் சி.டி விக்கிரமரத்ன ஆகியோருடன் பாதுகாப்பு, எரிபொருள், மின்சாரம் மற்றும் எரிவாயு தொடர்பான நிறுவனங்களின் தலைவர்களும் கூடி கலந்துரையாடப்பட்டது. ஆனாலும் அது தேனீர் கூட்டமாக முடிந்ததே தவிர கூறிக்கொள்ளுமளவுக்கு பெரிதாக ஒன்றும் நடக்கவில்லை.

நாட்டுக்கு வரவிருந்த டீசல் மற்றும் பெற்றோல் கப்பல்கள் தாமதமாகும் என எரிசக்தி அமைச்சு தெரிவித்தால் அடுத்தநாள் காலை எரிபொருள் நுகர்வோரினால் எரிபொருள் நிரப்பு நிலையத்திற்கு முன்னால் உள்ள வீதிகள் முடங்கும் அபாயம் நாட்டில் எல்லா இடங்களிலும் நிலவுகிறது. பெற்றோல் கிடைக்குமோ அல்லது கிடைக்காதோ என்ற ஏக்கத்தில் தற்போது எரிபொருளுக்காக நாட்டின் அனைத்துப் பகுதிகளிலும் அதிகாலை 3 மணி தொடக்கம் எரிபொருளை பெற்றுக்கொள்ள மக்கள் நீண்ட வரிசைகளில் காணப்படுகின்றனர் எரிபொருளுக்காக தினமும் மக்கள் காத்திருப்பதை அவதானிக்க முடிகின்றது. நாட்டில் பெரும்பான்மை இடங்களில் பல எரிபொருள் நிரப்பு நிலையங்களில் பல்வேறு எரிபொருளுக்காக நீண்ட வரிசையில் காத்திருப்பதுடன் எரிபொருள் உரிமையாளருக்கும் பொது மக்களுக்கும் முறுகல் நிலையும் ஏற்படுகின்றது.

இங்கு பொலிஸாரும் இராணுவத்தினரும் பாதுகாப்பு கடமையில் ஈடுபட்டுள்ள போதிலும் மக்கள் பொறுமையை இழக்க நேரிடுகிறது. இதனால் பல்வேறு சிரமங்கள் ஏற்பட்டுள்ளன.

சில எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கு சுமார் 5 தொடக்கம் 10 நாட்களுக்குப் பின்னர் மண்ணெண்ணெய் விநியோகிக்கபடுவதுடன் ஒருவருக்கு 300 முதல் 500 ரூபாய்க்கு மாத்திரமே வழங்கப்படுகின்றது.

நூற்றுக்கணக்கான பொதுமக்கள் நீண்ட வரிசையில் நின்று அசௌகரியங்களுக்கு மத்தியில் மண்ணெண்ணெய்யை கொள்வனவு செய்வதையும் அவதானிக்க முடிந்தது. சில மாவட்டங்களில் அம்மாவட்ட அரசாங்க அதிபரின் வழிகாட்டலில் பிரதேச செயலக ரீதியாக எரிபொருள் நிரப்பு நிலையங்களில் பிரதேச செயலாளர்களினால் அட்டைகள் வழங்கப்பட்டு குறித்த அட்டைகளுக்கு பெற்றோல் விநியோகிக்கப்படுகின்றது.

இதனால் அங்குள்ள பல்வேறு எரிபொருள் நிரப்பு நிலையத்தில் அரச திணைக்களங்களில் கடமை புரியும் உத்தியோகத்தர்கள் மிக நீண்ட வரிசைகளில் நின்று பெற்றோலைப் பெற்றுக்கொண்டுள்ளனர். மேலும் பல எரிபொருள் நிரப்பு நிலையங்களுடான டீசல் விநியோகமும் மேற்கொள்ளப்பட்டது. சுமார் ஒரு கிலோ மீற்றருக்கும் அதிகமான தூரத்தில் மிக நீண்ட வரிசையில் வாகனங்களுடன் காத்து நின்று டீசலைப் பெற்றுக்கொண்டனர்.

பல பகுதிகளிலும் எரிபொருள் நிரப்பும் நிலையத்தில் பெற்றோலை பதுக்கி வைத்திருப்பதாக தெரிவித்து பொது மக்கள் எதிர்ப்பு நடவடிக்கையில் ஈடுபட்டு வருவது இக்காலத்திலும் சிலரின் மனம் எப்படி இருக்கிறது என்பதை அப்பட்டமாக காட்டுகிறது. எரிபொருள் தேவை அதிகரித்துள்ளதுடன் மக்கள் நீண்ட வரிசைகளில் பல மணி நேரமாக காத்திருந்து எரிபொருட்களை பெற்று செல்கின்றனர். எரிபொருள் நிரப்பு நிலையங்களில் குறிப்பிட்ட எரிபொருட்கள் விநியோகிக்கப்படும் என பொற்றோலிய கூட்டுத்தாபனம் முன்கூட்டியே அறிவித்து வருகின்ற நிலையில் எரிபொருளை பெற்றுக்கொள்ள காலநேரமெதுவுமின்றி மக்கள் நீண்ட வரிசைகளில் குறித்த எரிபொருள் நிரப்பு நிலையங்களில் வரிசையில் காத்திருக்கின்றனர். அதன் போது அனைவருக்கும் எரிபொருட்களை பகிர்ந்தளிக்கும் முகமாக சில எரிபொருள் நிரப்பு நிலையங்கள் 1000 முதல் 2000 ரூபாய்க்கே எரிபொருட்கள் வழங்கி வைக்கப்படுகின்றது. அதனால் பல மணி நேர காத்திருப்பின் பின்னரும் மக்களுக்கு 2 முதல் 3 லீட்டர் வரையான எரிபொருட்களே பெற முடிந்துள்ளதாக குற்றச்சாட்டும் முன்வைக்கப்பட்டு வருகின்றது.

இது தவிர வேளாண்மை அறுவடை, விவசாயிகளின் விவசாய நடவடிக்கை பாதிப்பு, மீனவர்களுக்கு எரிபொருட்களை சீராக பெற்றுக்கொள்ள சிரமப்படுதல், போக்குவரத்தில் சிரமம், சேவைகள் வழங்குவதில் தாமதம், உட்பட பல்வேறு காரணங்களை தெரிவிக்கும் மக்கள் இதனால் பல்வேறு அசௌகரியங்களையும், விலையேற்றங்களையும் சந்தித்துள்ளனர். எரிபொருள் நிரப்பு நிலையங்களில் முறைகேடாக எரிபொருள் விநியோகம் நடைபெறுவதாகவும் இவ்விடயங்களில் அரசாங்க அதிகாரிகள் பாராமுகமாக இருப்பதாகவும் தெரிவித்து எரிபொருளுக்கு காத்திருந்தோர்கள் அரச உயரதிகாரிகளை சந்தித்து எரிபொருள் பிரச்சினைக்கு நிரந்தர தீர்வை பெற்றுத்தருமாறு கோரிக்கை விடுத்த சம்பவங்களும் ஆங்காங்கே அரங்கேறின இரவு நேரங்களில் முறைகேடாக எரிபொருள் வழங்கப்படுவதாகவும், பாதுகாப்புக்கு நிற்கும் பாதுகாப்புப் படையினர் இந்த செயலுக்கு துணை போவதாகவும், பொலிஸார் தமது நண்பர்களின் வாகனங்களை கொண்டுவந்து எரிபொருள் நிரப்பி கொடுப்பதாகவும் தெரிவித்த பொதுமக்கள் எரிபொருள் வழங்குவதற்கு ஒரு முறையான பொறிமுறையை உருவாக்குமாறு சம்பந்தப்பட்டவர்களை கேட்டுக்கொண்டுள்ளனர்.

இப்படியான கோரிக்கைகளுக்கு இணங்க சாய்ந்தமருது பிரதேச பிரச்சினைக்கு தீர்வை காணும் நோக்கில் சாய்ந்தமருதிலுள்ள எரிபொருள் நிரப்பு நிலையங்களில் சாய்ந்தமருது - மாளிகைக்காடு பிரதேச மக்களுக்கு மட்டும் கிழமையில் ஒருநாள் தனியாக எரிபொருள் வழங்க பிரதேச செயலத்தில் பிரதேச செயலாளர், ஜூம்ஆப் பள்ளிவாசல் நிர்வாகிகள், அரச உயர் அதிகாரிகள், பொலிஸார், எரிபொருள் நிரப்பு நிலையங்களின் உரிமையாளர்கள், சிவில் சமூக செயற்பாட்டாளர்கள் கலந்து கொண்டு நடைபெற்ற கூட்டத்தில் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன் ஏனைய நாட்களில் வழமை போன்று சகலருக்கும் எரிபொருள் வழங்கவும் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. ஆனால் அதை நடைமுறைப்படுத்துவதில் நிறைய சிக்கல்கள் இருந்ததை எண்ணி எரிபொருள் நிரப்பு நிலைய உரிமையாளர் அந்த கூற்றை நிராகரித்தார். இப்படி எந்தவகையான முடிவையும் கண்களை மூடிக்கொண்டு எடுக்கும் நிலைக்கு இலங்கை எரிபொருள் தட்டுப்பாடு மாறியிருக்கிறது.

தேர்தல் வாக்குண்டியலுக்காக எங்களுக்கு அரபு நாட்டு எண்ணெய் தேவையில்லை என்ற இனவாத சிந்தனை கொண்டோர்களை நாடு இப்போது தேடிக்கொண்டிருக்கிறது. இனவாதமாக செயற்பட ஜனாதிபதிக்கும், அமைச்சரவைக்கு, அரசுக்கும் ஆலோசனை வழங்கியதுடன் மட்டுமல்லாது பல நூறு முஸ்லிம் ஜனாஸாக்களை எரித்தவர்கள் இப்பொது இருக்கும் நாட்டின் நிலைக்கு பொறுப்புக்கூற கடமைப்பட்டுள்ளார்கள். இவர்களின் முறையற்ற முகாமைத்துவம் தான் நாட்டின் இன்றைய நிலைக்கு காரணம். உதவியாக, நன்கொடையாக வந்த நிறைய அரபு நாட்டின் ஸதக்காக்களை இனவாத சாயம்பூசி, தீவிரவாத முத்திரை குத்தியோர் இன்று டொலர் தேடியலைவதும், எண்ணெய் பெற அரபு தேசங்களுக்கு படையெடுப்பதும் ஆச்சரியமாக இல்லை. நகைப்புக்குரியதாகவே மாறியிருக்கிறது.

470 ரூபாய்க்கு சந்தையிலும், 1200 ரூபாய்க்கு மேல் கருப்பு சந்தையிலும் பெற்றோலை வாங்கும் சேவை வழங்குநர்களும், வியாபாரிகளும் அதன் மூலம் வழங்கும் சேவை கட்டணத்தை பலமடங்கு கூட்டியிருப்பதனாலும், விலைகள் ஏறியிருப்பதனாலும் நேரடியாக பாதிக்கப்பட்டது சர்வதேச வங்கிகளில் கருப்புப்பணத்தை பதுக்கி வைத்திருப்பார்கள் அல்ல. சாதாரண மக்களே.

